www.padippakam.com

# வெளிச்சம்

THOONDIL
Südasien Büro
... Heimstr. ...
Dortmund ...

நிரந்தரமாகிவிடு...

வட-கிழக்கில்

சுக...ார

பிள்ளைகட்கு நஞ்சூட்ட்

தாயும் தற்கொலை

ஆயிரம் பேர் பட்டினி

பகுதியில்

போத

“கிழக்...
கருகிச் செத்து
நெல் வயல்களைப்
பார்க்க வயிறு
பற்றி எரிகிறது”

கஷ்டங்களையும் நெருக்கடிகளையும்
எதிர்நோக்கி வாடும் மக்கள்!

மாங்குளத்தில் மக்கள் காடுகளிலும
விலங்குகள் வீடுகளிலும் அடைக்கலம்

முல்லைத்தீவில் தொடர்ந்து மோதல்

ஜனம்-3 ஆகஸ்ட்-செப்டம்பர் 1990 குரல்-2

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

# எமது எண்ணங்கள்

அரசியல் தந்திரோபாயமற்ற பாசிச இராணுவ நடவடிக்கைகளை ஆயுத ஆட்சி அதிகாரத்துக்குவேண்டி போராட்டமென்னும் முலாம் பூசி சொந்த மக்களையே பலிக்கடாக்களாக்குகின்றனர் புலிகள். பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை என்று கூறிக்கொண்டு இனவெறி அரசு தமிழ்பேசும் மக்களை கொன்று குவிப்பதும், கிழக்கில் சிங்களக்குடியேற்றங்களை மேற்கொண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பிற்கு வாக்கு வேட்டை நடாத்த முனைகிறது பேரினவாத அரசு. ஆக மொத்தம் மக்கள் நலன்களில் அக்கறையற்ற இரு மக்கள் விரோத சக்திகளினால் மக்கள் சொல்லொணா வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்து மௌனியாகி மனதுக்குள் குமுறி இரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர்.

புலிகளை பேச்சுவார்த்தை என்று அரசு இழுத்தடித்தபோதே புலிகளின் பலத்தையும் பலவீனத்தையும் புரிந்து கொண்டது. இது வடமராட்சி "லிபரேசன் ஒப்பரேசன்" நடவடிக்கைகளுக்கு முன்பாகவும் இராணுவப் பரிமாற்றங்கள் சந்திப்புக்கள் என நடைபெற்றது. பின்பு லிபரேசன் ஒப்பிரேசன் நடாத்தப்பட்டதும் நிலைகுலையப்பட வேண்டியது. போராட்டம் எல்லோருக்கும் புதிய அனுபவமாயினும் முதலில் விட்ட தவறுகளை பின்பும் தவிர்த்துக்கொள்ள முடியாமல் அரசின் அரசியல் சதியில் விழுந்து தப்பமுடியாமல்போன புலிகளின் அரசியல் சாணக்கியம் இங்கு கவனத்துக்குரியது.

புலிகள் இராணுவ உடைகளுடன் கொழும்பு சென்றதும் நட்சத்திர கோட்டல்களில் தங்கியதும் "ரம்போ" பாணியில் வர்ணிக்கப்பட்டன. பேச்சுவார்த்தைகள் இராஜதந்திரமென முழக்கமிடப்பட்டன. இனவெறி அரசோ அரசியல் தீர்வு என்று சொல்லி தவித்த புலிகளுடனேயே பேச்சுவார்த்தை நடாத்தியது. ஏற்கனவே மாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கலில் விடாப்பிடியாக நின்ற ஏனைய கட்சிகளை தமது ஏமாற்று வழிக்கு கொண்டுவர முடியாது எனக்கணித்துக்கொண்ட மேன்மை தங்கிய பிரேமதாசா கூட்டம் புலிகளையே தமக்கு சரியான ஆளாக தேர்ந்தெடுத்தது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் செல்வாக்கைப் புரிந்துகொண்ட பேரினவாத அரசு புலிகளின் மூலம்

www.padippakam.com

யுத்தத்தை ஏற்படுத்தி இனஅழிப்பை ஏற்படுத்துவதன்மூலம் ஏனைய மக்கள் செல்வாக்குள்ள தமிழ் அரசியல் சக்திகளையும் பலவீனப்படுத்துவதோடு சிங்கள மயமாக்கும் திட்டத்தை மேற்கொண்டு கிழக்கை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் திட்டத்தை மனதில் கொண்டு செயற்பட்டுவந்தது. இன்று அதில் குறிப்பிடக்கூடியளவுக்கு வெற்றியும் கண்டுள்ளது.

இந்திய இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையிலான மோதலையும் சிறிலங்கா இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையிலான மோதலையும் கண்ணோட்டமிடுவோமாயின்

இந்திய அரசும் ஆரம்பத்தில் புலிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வரவே விரும்பினர் அவ்வாறு அடைந்த காலங்களில் புலிகளின் அரசியல் சாணக்கியங்களை கணக்குப்போட்டுக்கொண்டதால் அவர்கள் மக்கள் நலனைவிட தமது அதிகார நலனிலேயே கூடிய அக்கறையுள்ளவர்களாதலால் அவர்களைச் சமாளித்துக்கொண்டு போகமுடியும் என்றே இந்திய அரசு நம்பியது ஆனால் புலிகள் ஜனநாயக வழிக்கு வந்து மக்கள் முன் முகம்கொடுக்கமாட்டார்கள் ஆயுத ஆட்சி அதிகாரத்தையே நடாத்துவார்கள் என்பதையும் கணிப்பிட இந்திய அரசு தவறிவிட்டது. முடிவு ஏகப்பட்ட காரணங்களுடன் யுத்தம் ஜனநாயகவழி மக்களின் சகஜவாழ்வு போன்றவைகளை ஏற்படுத்த முனைந்த சக்திகளை துடைத்து அழித்தொழித்து அமைதிப்படையாய் வந்தவர்களை காறித்துப்புமளவுக்கு பிரச்சனைகளை திசைதிருப்பி போகவைத்ததுதான் மிச்சம். இன்றும் இலங்கை அரசும் தமது அனைத்துக் கபட நாடகங்களையும் ஆடி புலிகளை ஆட்சியில் அமர்த்துவதே சரியென நினைத்தது. ஆனால் ஜனநாயக வழியில் தேர்தல்மூலம் ஆட்சியில் அமர்த்துவதே அரசின் நோக்கம் புலிகள் அதை எக்காலத்திலும் ஏற்றுக்கொண்டதில்லை. ஆகவே அரசு திண்டாடுகிறது அன்று இந்திய அரசும் சரி இன்று இலங்கை அரசும் சரி புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவரவேண்டும். தமது நோக்கங்கள் நிறைவேற வேண்டுமென காலத்தை இழுத்தடிப்பானது புலிகள் இந்திய வல்லரசை இரண்டு வருடங்கள் தாக்குப்பிடித்தார்கள் இலங்கை இராணுவத்தை நான்கு மாதங்கள் தாக்குப்பிடிக்கிறார்கள் அவர்கள் "ரம்போ வீரர்கள்" என ஆயுதக் கவர்ச்சி விரும்பிகள் வெற்றிப் பெருமிதமடைய வைத்துள்ளதோடு புலிகள் தமது நிலைகளை பலப்படுத்த வாய்ப்பைக் கொடுத்து ஆப்பிழுத்த குரங்கான நிலைக்கு இரு அரசுகளும் தள்ளப்பட்டுள்ளன.

அன்று இந்திய அரசு புலிகள் ஜனநாயக வழிக்கு வரமாட்டார்கள் என்று உணர்ந்தபோதே ஏனைய கட்சிகளை நாடினர். அன்றைய அமைதிவழி நடவடிக்கைகளுக்கு ஜனநாயக வழிமுறைகளுக்கு மாகாண அரசின் மூலம் தமிழ்பேசும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆகக்குறைந்த உரிமைகளை பாதுகாக்க அதிகாரப் பரவலாக்கலை பூரணப்படுத்துவது போன்றவற்றை மேற்கொண்ட EPRLF, ENDLF போன்ற அமை

படிப்பகம்

www.padippakam.com


யுக்கள் துரோகிகள் என்று பட்டம் சூட்டப்பட்டனர். ஆனால் இன்று கிட்டு இந்தியாவின் உதவி கோரியிருப்பது துரோகமல்ல ராஜதந்திரமே - இன்று இலங்கை அரசும் புலிகள் ஜனநாயக வழிக்கு வரமாட்டார்கள் என்று உரைத்தொடங்கியுள்ளது ஆயினும் PLOT, TELO, EPRLF, TULF, ENDLF போன்ற அமைப்புக்கள் இவ்ஜனநாயக வழியை ஏற்படுத்த முனைந்தால் கிழக்கு பறிபோய்விடும் அவர்கள் மீண்டும் அதிகாரப்பரவலாக்கல் என்று முழக்கமிடுவார்கள். புலிகளைப்போன்று அவர்கள் எல்லோரையும் விலைக்கு வாங்கிவிட முடியாது இதில் அரசிற்கு ஏற்கனவே அநுபவமுண்டு ஆகவே இப்போதுகூட புலிகள் ஜனநாயக வழிக்குவரமாட்டார்களா என்ற அரசின் ஏக்கம் இழுத்தடிப்பாக சர்வகட்சி மாநாடு பேச்சுவார்த்தை என்று தாமதப்படுத்தி மக்களின் அழிவைத் தொடரவைக்கிறது.

இரண்டு கட்டாளிகளும் தங்கள் நலன்களைப் பிரிக்கும் பிணக்கின் திக்குகளுக்குள் மோதிக்கொண்டுள்ளார்கள். இதை தமிழீழப் போராட்டமென்றும், பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையென்றும் இருபகுதியினரும் விடும் அறிக்கைகளை நம்பி யாரும் ஏமாந்து போகக்கூடாது. இவர்களின் நலன்களைப் பிரிக்கும் பிணக்கு தீர்க்கப்பட்டால் மீண்டும் ஒன்று சேரலாம் அதற்கு ராஜதந்திரம் என்ற மகுடம் சூட்டுவதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவர்களின் பிணக்குகள் தீர்க்கப்படாமல் நிலையில் அரசு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் உதவியுடன் ஜனநாயகம் வருகிறது என்று நாடகமாட முன்வரலாம் மக்களின் நலன் விரும்பும் சக்திகள் மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற சகஜவாழ்க்கையை ஏற்படுத்த தற்காலிக அமைதியை ஜனநாயக சூழலை ஏற்படுத்த அரசின் வேண்டுகோளை ஏற்று முன்வரலாம். இதுவரை இலங்கை அரசுடன் எந்த நோக்கமுமில்லாமல் சொந்த நோக்கத்திற்காக பேச்சுவார்த்தை நடாத்தியதை பிரேமதாசாவை அதி உத்தம புருஷராக வர்ணித்தது தந்திரோபாயமென்று கூறிய புலிகள் இனிமேல் மக்கள் நலனுக்காக முன்வரும் சக்திகளை முன்பு இந்தியக் கைக்கூலிகள் என்றும் துரோகிகள் என்றும் வர்ணித்ததுபோல் இலங்கை அரசின் கைக்கூலிகள் என்றும் துரோகிகள் என்றும் பட்டம் சூட்டலாம். ஆனால் எத்தகைய தூற்றல்களை ஏற்றுக்கொண்டாலும் மக்கள் உயிர்வாழவேண்டி சகஜவாழ்க்கைக்கு திரும்பவேண்டி மக்கள் நலன் விரும்பும் சக்திகள் இதை ஏற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

4

# ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப்போக்கில்



அ.நேசன்

இன்று உலகில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அரசியல் மாற்றங்கள், பிராந்தியங்களுக்குள் சூழந்துகொண்டிருக்கும் யுத்தமேகங்கள் போன்றவைகள, நடைமுறை சோசலிசத்தின் பின்னடைவையும், முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின் உலகம் தழுவிய ஆதிக்கப்போக்கையும் எமக்கு எடுத்து இயம்புகின்றன. கடந்த காலத்தில் சோசலிச முகாம்களுக்குள் ஏற்பட்ட சில நடைமுறைத்தவறுகளும், அத்தவறுகளை களைந்து முன்னேறுவதற்காக மேற்கொள்ளபபட்டிருக்கின்ற மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களையும், சோசலிச முகாம்களை நிர்மூலமாக்கும் தமது அரசியல் நலன்களுக்காக உள்வாங்கிக்கொண்டு தமது ஆதிக்கத்தை உலகளாவியரீதியில் நிலைநாட்ட இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதாரப்பிரயோகங்களை முனைப்புடன் மேற்கொள்ள முனைந்துவிட்டது அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும், இவ் ஆளும் வர்க்கங்கள் தமக்கான புதிய எதிரிகளை உலகில் தேடி அலையவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் மேற்குலக நலன்களுக்கு துணைபோக அல்லது மண்டுகொடுக்க விரும்பாத ஜனநாயக சக்திகளை தேடி அழிப்பதுடன் அமெரிக்கக் கண்டத்தில் தமது சுரண்டல் நலன்களுக்காக எவ்வகையான இராணுவ சர்வாதிகார ஆட்சி முறையை ஏற்படுத்தியதோ அதேபோல் ஏனைய கண்டங்களிலும் தனது சுரண்டலை விஸ்தரிப்பதற்காக தனது கூட்டாளிகளின் துணையுடன் மேற்கொள்ள முனைந்து வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

ஆசிய, பசுபிக் மற்றும அத்லாண்டிக் பிராந்தியங்களில் உள்ள இராணுவத்த

www.padippakam.com

எங்களை மீட்பெறும் விடயத்தில் சோவியத் யூனியன் 1988,1989 ஆண்டுகளில் முன்வைத்த யோசனைகளை அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும் நிராகரிக்கும் நோக்கிலேயே செயல் பட்டு வருகின்றது. என்பது நிலைமைகளை ஆழமாக அவதானிக்கின்ற அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இப்பிராந்தியங்களில் அமைதியும, சமாதானமும், பாதுகாப்பும் நிலவ வேண்டுமானால் நிலைகொண்டிருக்கும் ஆயுதப்படைகளின் தளங்கள் யாவும் அகற்றப்பட வேண்டும் என்பதே பிராந்திய மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஏனைய பிராந்தியங்களுடன் கணிப்பிடுகையில் ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலேயே அதிகமான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரயோகத்திற்கான தளங்களை அமெரிக்க ஆளும் வர்க்கம் கொண்டுள்ளது இப்பிராந்தியத்தில் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தளங்களை அமெரிக்க ஆளும் வர்க்கம் அமைத்திருக்கின்றது இந்துமாகடல் பிராந்தியத்தில் டியாகோ கார்சியா தீவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளமே இப்பிராந்தியத்திலுள்ள மக்களை அச்சுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் தமது இராணுவத தளங்களை அமைத்ததின் மூலம் இப்பிராந்தியங்களிலுள்ள 100க்கு மேலான கரையோர நாடுகள் தமது கடல் வளத்தைப் பயன்படுத்த முடியாதவகையில் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் மேற்குலகக் கூட்டாளிகளும் செயல்பட்டு வருகின்றனர் இவ் ஆளும் வர்க்கங்களின் திட்டமிட்ட நடவடிக்கையின் விளைவாக இவ்வளர்முக நாடுகள் ஒவ்வொன்றும் வருடாவருடம் 2000 கோடி டாலர்களை இழந்துவருகின்றனர் இப்பிராந்தியத்தில் அமெரிக்க-ஜப்பான், அமெரிக்க-தென்கொரிய, அமெரிக்க-பாகிஸ்தான் கூட்டுக்கள் போன்றவைகளின் விளைவாக இப்பிராந்தியத்திலுள்ள வளர்முக நாடுகள் மத்தியில் அரசியல் ஸ்திரமின்மையை உருவாக்க முனைவதுடன் இப்பிராந்தியத்தை அமைதியற்ற பிராந்தியமாக வளர்ச்சி பெறச்செய்வதின்மூலம் தமது சுரண்டல் தொழிலை இலகுவில் நடைமுறைப்படுத்தலாமென முனைப்புடன் செயல்பட்டுவருகின்றது ஜப்பானில் 120 இராணுவ கேந்திர நிலையங்களில் 60ஆயிரம் அமெரிக்க ஆயுதப்படைகள் நிலைகொண்டுள்ளன தென்கொரியாவில் 50ஆயிரம் ஆயுதப்படைகள் நிலைகொண்டுள்ளன பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் இராணுவ கடற்படைத்தள உடன்படிக்கை 1991ம் ஆண்டுடன் காலாவதியாவதைத் தொடர்ந்து குவாம் மைகரோனேசியா கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் பக்கம் நகர்த்த பென்டகன் அதிகாரிகள் திட்டம் வகுத்தனர்.

மத்திய கிழக்கில் தனது தத்துப்பிள்ளையான இஸ்ரேலையும்

www.padippakam.com

அரபு நாடுகளில் [illegible] குவைத் போன்ற நாடுகளையும் தனது கைக்குள் போட்டுக்கொண்டு தனது ஆதிக்கப்போக்கையும் சுரண்டலையும் மேற்கொண்டு வருகின்றது. இப்பிராந்தியத்தில் தனது நலன்களுக்கு வளைந்து கொடுக்க விரும்பாத லிபியா, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் ஈராக்குடன் முதலில் சீண்டலாம் என்று புதிய எதிரிகளைத் தேடிக்கொண்டிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு, ஈராக்கிற்கும் குவைத்துக்குமிடையிலான பாரம்பரிய உறவு, எண்ணெய்க்களவு போன்ற பிரச்சனைகளைப் பயன்படுத்தி ஈராக்கின் மீது போர்தொடுக்க தனது படையணிகளை மத்திய கிழக்கின் பக்கம் நகர்த்தியுள்ளதுடன் தனது மேற்குலகக் கூட்டாளிகளின் படையணிகளையும் உதவிக்கு அழைத்துள்ளது. இவ்வகை நடவடிக்கைகள் ஒருவரின் நிலையிலிருந்து மற்றவர் மீள்வாங்க முடியாத யுத்தத்திற்கான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிவதுடன் அமெரிக்க ஆளும் வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் உலகளாவிய ரீதியில் தமது ஆதிக்கப்போக்கை நிலைநாட்ட துடிக்கின்றனர் என்பது புலனாகிறது. இவ்வகையான நிலைமைகளினூடாக சவூதி அரேபியாவிலுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் இராணுவத்தளம் மேலும் பலமடங்கு விஸ்தரிக்கப்படுவதுடன் மத்திய தரைக்கடல் பிராந்தியம் எப்போதுமே கொந்தளிப்புள்ள யுத்த ரணகள பிரதேசமாக அமைக்கப்படும் என்பதே எதிர்கால உண்மைகளாகும்.

ஒரு புறம் சோவியத் யூனியன் அமெரிக்காவுடனும் அதன் கூட்டாளிகளுடனும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து படைகளை முழுமையாக வாபஸ்வாங்குதல், ஆயுத தளபாடங்களை நிர்மூலமாக்குதல், ஏவுகணைகளை முற்றாக ஒழித்தல், ஏனைய பிராந்தியங்களிலுள்ள தளங்களை மீளப்பெற்று அப்பிராந்தியங்களில் அமைதியை உருவாக்குதல் போன்றவைக்கான யோசனைகளை அக்கறையுடன் மேற்கொள்ள முனையும்போது அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும் ஆசிய, பசுபிக் மற்றும் அத்திலாண்டிக் பிராந்தியங்களில் தமது அரசியல், இராணுவ மற்றும் பொருளாதார மேலாண்மையை உருவாக்க முனைப்புடன் செயல்பட்டு வருவதுடன் அதற்கான புதிய எதிரிகளையும் உலகில் தேடி அலைய ஆரம்பித்து விட்டது. சோஷலிச முகாம்களுக்கு பிரயோகிப்பதற்காக உருவாக்கப்பட்ட இராணுவ தளபாடங்கள் யாவும் புதிய எதிரிகளுக்கு எதிராகவும் மற்றும் 3ம் உலக நாடுகளில் இவ் ஆளும் வர்க்கத்தினால் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் புதிய பிரச்சனைகளுக்கும் பாவிக்கப்படும் என்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் கூட்டாளிகளினதும் நடவடிக்கைகளிலிருந்து உணரமுடிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# சங்கரப்பிள்ளையின்
## சிந்தி அரசியல் - ஆறு



சங்கரப்பிள்ளையருக்கு நேற்று நடந்ததை நினைக்கும் போது வயித்தைக் கலக்கிது. பாவங்கள் அந்தக் குஞ்சுகளும், குமருகளும் பசியாலை அடிச்சதைப்பார்த்து தாங்கமுடியாமல் குளிசமணி அறுத்துக்கொட்டையை அரைச்சு தானுங்குடிச்சு பிள்ளையளுக்கும் கொடுத்து செத்துப்போனாள். செத்தவீடு கூட நடத்த முடியாமல் பள்ளிக்கூட வளவுக்கு பின்னாலை மண்ணை தோண்டிப்போட்டு எட்டுப்பிரேதங்களையும் தாக்க வேண்டிய கண்றாவி நிலையாப்போச்சு. நாளைக்கு எனக்கும் உது தான். காசிருந்தென்ன காணியிருந்தென்ன இனசனமிருந்தென்ன ஆண்டியுமெங்கே அரசருமெங்கே அகதியானபின் கூடாரங்கே ஆதலினால் சமரசமுலாவுமிடம் அகதி முகாம் என்ற நிலையாய் போச்சு. அநியாயமாய் அள்ளியள்ளி ஆயிரமாயிரமாய் கொடுத்தம் எங்கட காசிலை. வானங்களையும் வெடியனையும் விட்டிட்டு எல்லாத்தையும் போராட்டமென்று நம்பி நம்பி எக்கச்சக்கமாய் ஏமாந்து போனம். குசுமணியும் பிள்ளையளும் இப்படி அநியாயமாய் செத்துப் போச்சுதுகள். இந்த சண்டையாலை எவ்வளவு சனம் செத்து றோட்டிலை நாயிழுக்குது என்று கேட்டால் போராட்டமென்டால் உதெல்லாம் தவிர்க்கேலாது உங்களுக்கு இதெல்லாம் விளங்காது என்டு வியாக்கியானம் சொல்லுகினம். எங்க போய் முடியப் போகுதோ என்டு 'சங்கரப்பிள்ளையர் தனக்குள்ளையே திட்டிக்கொண்டு மனதுக்குள்ளை. மன் அள்ளி கொட்டி திட்டிக்கொண்டார். மனதுக்குள்ளை திட்டவாவது விட்டிருக்கினமே அதுவே பெரிய காரியம். மனதுக்குள்ளை திட்டிறதை

www.padippakam.com
யும் கண்டுபிடிச்சு வெடிவைக்க தொடங்கிச்சினமெண்டால் நாட்டி
யொரு பூச்சி புழு கூட மிஞ்சாது. என்று முணுமுணுத்தவாறு மூ
டைப் பார்த்தபடி பள்ளிக்கூட மூலையிலை உட்காந்திருந்தார்.

என்ன பிள்ளையர் முகட்டை பார்த்துக்கொ
ண்டு உட்காந்திருக்கிறீர் வான் நனைஞ்சுதோ எனி நனைஞ்சுதோ.
வாத்தியார் புன்சிரிப்புடன் வந்தார்.

உங்களுக்குவாத்தியார் உந்த நக்கல் நளினத்தை விட்டால் வேறு
யொண்டும் தெரியாதோ.

பிள்ளையரின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்து சிரித்துக்கொ
ண்ட வாத்தியார்.

அதில்லைப்பிள்ளையர் நீங்களாய தேடிக்கொண்ட வினையிது. நல்ல
அனுபவியுங்கோ. அதை விடும் இண்டைக்கு வெறும் தேத்தண்ணிதான
ம் இதைக்குடியும் என்றவாறு கொண்டு வந்த தேத்தண்ணிக்குவளை
நீட்டினார்.

என்ன வாத்தியார் அக்கிரமம் என்ரசீவியத்திலை வெறுந்தேத்தண்
குடிச்சறியன் என்னாலையிதைக் குடிக்கேலாது. எப்பபிரச்சனை தீ
மோ எப்ப சீனி போட்டு குடிக்கப்போறமோ.

இவ்வளவு வந்தாப்பிறகும் உங்கடை திமிர் அடங்கேல்லை பார்த்
ரோ. பிள்ளையர் உங்களுக்கெல்லாம் சொகுசான வாழ்க்கை போ
ட்டுதே என்றுதான் கவலை. அவைக்கோ ஆயுதத்தையும் கதிரைய
யுமொண்டாய்த்தரவில்லையெண்டு கவலை. தினம்தினம் வெறுந்தேத்
ண்ணி குடிக்கிற சனங்களுக்கு இதொண்டும் புரியில்லை நீங்கள்தான்
உண்மையான அகதிகள்.

வாத்தியாருக்கு வாயைத்திறந்தால் அரசியல்தான். வாருங்கோ
மரத்தடிக்குக்கீழ போவம்.

நீங்கள் உண்மையை உணர்க்கப்படும் வரைக்கும் உங்களுக்குக் க
டம்தானென்றவாறு வாத்தியார் பிள்ளையருக்குப்பின்னால் மாமர
த்தடிக்குப்போனார்.

அக்கம்பக்கம் திரும்பிப்பார்த்த பிள்ளையர் அதுசரி வாத்தியார்
இவை தங்களை ஆதரிச்சவையையே அழிக்கவும் கொடுமைப்படுத்
தவும் தொடங்கி விட்டினம் இது எங்கபோய் நிக்கப்போகுதெண்டு
நினைக்கிறியள்.

பிள்ளையர் சிங்களச்சனங்களை இவை சுடயிக்கை அது போராட்
ண்டினம் நீங்கள் தலையாட்டினியள், முஸ்லீம் சனங்களை சுடயிக்கை
படிப்பகம்

www.padippakam.com
பொடியளை சுட்டுப்போட்டு சமூகத்துரோகிகள் கொள்ளைக்காரர் போராட்டத்திலை இவையளை அழிக்கிறது தவிர்க்கேலாது எண்டினம் அதுக்கும் தலையாட்டினியள். கதிரை தரயில்லையெண்டவுடன் இந்தியன் ஆமியோட கொழுவிப்போட்டு போராட்டமெண்ட சாட்டைச் சொல்லிச்சினம் அதுக்கும் தலையாட்டினியள். வேற இயக்கப் பொடியள் ஆமியின்ரை காம்பிலையிருந்து தலையாட்டுறாங்கள் துரோகிகள் எண்டினம் அதுக்குமொரு தலையாட்டந்தான். இப்ப அரசாங்கத்தோடை பதினாலு மாசமாய் குசுகுசுத்தினம் அதை ராஜதந்திரம் எண்டினம். கோயில்மாடு மாதிரி தலையாட்டினியள் இப்ப அவையை ஆதரிச்சஉங்கடை மடியிலை கைவைக்க வந்திட்டினம். போராட்டத்திலைஎங்கடை ஆட்கள் வேற ஆட்கள் எண்டு பார்க்கேலாது எண்டு சமத்துவம் பேசுகினம். அதுக்கும் தலையாட்டுறீங்கோ நீங்கள்தான் சரியான தலையாட்டிப் பொம்மையள். ஆனால் பிள்ளையர் நீங்கள் மற்றச் சனங்களுக்கு நடக்கேக்க நாளைக்கு உங்களுக்கும் நடக்கும் எண்டு நினைக்காமல் தலையாட்டினியள் இப்பஉங்கடை தலைக்கே வந்திட்டுது. இதுக்குப் பெயர்தான் காஸிசம் பாசிசம். ஜேர்மன் சர்வாதிகாரியும் முந்தி உப்பிடித்தான் மற்ற நாடுகளோடை சண்டை பிடிக்கேக்கை சனங்கள் ஆதரிச்சுதுகள். ஜேர்மனிக்குள்ள யூதர்களை கொலை செய்யேக்கை கூட சனம் வாய் திறக்கேல்லை. தங்கடை ஆட்களையே கொலை செய்யத்தொடங்கினாப்பிறகு தான் சனங்களுக்கு பாசிசமெண்டால் என்னெண்டு விளங்கிச்சுது. ரஸ்யாவின்ரை அடிக்கு தாக்குப் பிடிக்கேலாமல் தோல்வியாய் போன போது சனங்களும் எதிர்ப்புக் காட்டத்தொடங்கிச்சுதுகள். பாசிசத்தின்ரை மாய நாடகங்களிலை சனங்கள் மயங்கி உண்மையெண்டு நம்பிறது அப்பவும் இப்பவும் வித்தியாசமில்லை. ஆனால் எப்பவும் முடிவொரேமாதிரித்தான். இங்கையும் அது நடந்துதான் தீரும்.

வாத்தியார் நீங்கள் சொல்லுறது கொஞ்சம் விளங்குது ஆனால் நாங்கள் இதுக்கு என்ன செய்யிறது.

திரும்ப திரும்பச் சொல்லுறன் பிள்ளையர் இதை வளர்த்ததிலை உங்கடை சுயநலப் போக்குக்கு பெரும் பங்கிருக்கு. முதலிலை இப்ப நடக்கிறது போராட்டமில்லையெண்டு விளங்கினால் இப்போதைக்கு அதுவே போதும். அரசியல் என்கிறது தொழில் எண்டு நினைக்காதையுங்கோ.வாரும் உள்ளுக்கு போவம். இருவரும் நடந்தனர்.

# இலக்கியச் சந்திப்பு

அ.அலெக்ஸ்

இலக்கியச் சந்திப்பு தொடரின் 8வது நிகழ்ச்சி எஸன் (ESSEN) நகரில் 09-06-1990 அன்று காலை 9.45லிருந்து மாலை 6.30 மணிவரை நடைபெற்றது. அக்னி, சிந்தனை, புதுமை, தேனீ, நமது குரல், ஈண்டில [?], வெகுஜனம், மண், அமுதம் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் ஆக்கதாரர்களும், பல தொடர் சந்திப்புகளின் பின் ஏலையா [?] சஞ்சிகையின் ஆசிரியர் குழுவினரும், வாசகர்களும் கலந்துகொண்டனர். எமது தாயக மண்ணில் மரணித்த மக்களுக்காகவும் போராளிகளுக்காகவும் ஒரு நிமிட அஞ்சலியுடன் 8வது செயற்குழு, செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான திருமதி தேவிகா கங்காதரனின் தலைமையில் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்றைய நிகழ்ச்சிகளில் வாசகர்கள், ஆக்கதாரர்கள் போன்றோரின் சஞ்சிகைகள் தொடர்பான விமர்சனங்கள், அதற்கான சஞ்சிகை ஆசிரியர்களின் பதில்கள், திரு வேலாயுதம் அவர்களின் "மலையக மக்களும் நாங்களும்" என்ற கட்டுரையும், அதற்கான விமர்சனங்களும், இங்கு வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகைகளில் வெளியான "கவிதைகள்" மீதான திரு முருகதாசன், சுசீந்திரன் ஆகியோரது பார்வைகள், "உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி" என்னும் தலைப்பில் திரு பரராஜசிங்கம், திரு அலெக்ஸ் ஆகியோரது கட்டுரையும் இவர்களது கட்டுரைகள் மீதான விமர்சனங்களும் நிகழ்ச்சியைச் சிறப்பித்துக்கொண்டன.

இந்நிகழ்ச்சித் தொடரில் ஒவ்வோர் நிகழ்ச்சிகளுக்கும் செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாறிமாறி தலைமைவகித்து நிகழ்ச்சியை நடத்தியது இதுவரைகால நிகழ்ச்சித் தொடர்களின் வளர்ச்சிப்போக்கில் முன்னேற்றகரமான அம்சமாகவிருந்தது. இவ

(27ம் பக்கம்பார்க்க)

www.padippakam.com


விழிகளில் வடிவது
கண்ணீர்த்துளிகள் அல்ல
தோழர்களே
இரத்தத்துளிகள்
எங்கள் கண்களில்
நீர்வற்றிப்போய்
நீண்டகாலமாகிவிட்டது
தற்போது
உணர்வுகள் வெடிப்பதெல்லாம்
தோள்கள்
தினவெடுப்பதற்காகவல்ல
கண்கள் நீர்வடிப்பதற்காக
நினைவின்
காலம் தொட்டு
மக்களுக்குக் கிடைத்த
ஜனநாயக உரிமை
அழுவது மட்டுமே
அதனையும் திருடிவிடச்
சில கூட்டம்
அராஜகம் புரிகிறது
அழுவதைக் கூட
நிறுத்தி விட
வேண்டுமாம்
தோழர்களே

உங்கள் இலட்சியங்களும்
நீங்களும்
மக்களுக்காக
மரித்துப் போவது மட்டுமே
சர்வ சாதாரணமாகிவிட்ட
எங்கள் தேசத்தில்
இனி ஒரு உதயத்தை
எப்போது காண்போம்
என் மக்கள்
வடிக்கும கண்ணீர்
துப்பாக்கிகள் கண்டு
உறைந்து விடுகிறது

தோழர்களே
உங்கள் இலடசியங்கள்
வீணே வீழ்ந்துவிட
எமக்கு சம்மதமில்லை
உங்கள் கல்லறைகளில்
நாங்கள்
கண்ணீர் வடிக்கின்றோம்
அது அஞ்சலியல்ல
எங்கள் சோகத்தைக்
கொஞ்சம்
அங்கே இறக்கிவைக்கின்றோம்
அதனால் தோழர்களே
எங்களிடம் மிஞ்சுவதெல்லாம்
நீங்கள் விட்டுச்சென்ற
இலட்சியங்கள்தான்

நாளை உங்களுக்கு
அருகே
எங்கள் கல்லறைகளும்
கட்டப்படலாம்
எங்களையும்
மிருகங்கள்
வேட்டையாடலாம்
ஆனாலும் தோழர்களே
வேட்கை கொண்டு
வீரர்கள்
ஓர் நாள் எழும்போது
சமுத்திரத்தைக் கூட
கைகளுக்குள்
அடக்கிவிடும்
சக்தி கொள்ளும்போது
மிருகங்களும்
மிதிபட்டுப் போவதை
வரலாறு
வீறாப்புடன் எழுதிக்கொள்ளும்
அப்போது
ஒரு விடிவு பிறப்பதே
எங்கள்
இறந்து பட்ட
இலட்சியத்
தோழரகளுக்கு
அஞ்சலி
தோழரகளே

அஞ்சலி

வி.யோகல்

www.padippakam.com


# மக்களை நேசித்த மாமனிதன்



தா-டானி

தமிழ் நாட்டில் வைத்து மிகவும் கோழைத்தனமான, புலிகளுக்கே உரித்தான முறையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 13 உறுப்பினர்களுடன் வைத்து படுகொலை செய்யப்பட்ட செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா அவர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும், வடகிழக்கில் உண்மையான சமூகமாற்றத்தை நடைமுறைரீதியாக ஏற்படுத்த விரும்பிய மார்க்சிய-லெனினிசவாதியுமாவார். 70களின் ஆரம்பங்களில் தமிழ் பேசும் மாணவர்களின் மீதான ஒடுக்குமுறைகளின் விளைவாக எழுந்த "தமிழ் மாணவர் பேரவை", தமிழ் இளைஞர் பேரவை" போன்றவைகளின் அரசியல் வேலைத்திட்டங்களினூடாக தனது பொது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்த தோழர் நாபா அவர்கள் ஆரம்பம் முதலே சர்வதேச கண்ணோட்டத்தைக் கொண்டிருந்ததுடன் சர்வதேச ஒடுக்கப்படும் நசுக்கப்படும் மக்களின் போராட்டங்களுடன் இணைத்துக்கொள்வதில் மிகவும் அக்கறை காட்டிவந்தார். தமிழ் பேசும் மக்களின் விடுதலையானது ஒரு ஆயுதப்போராட்டங்களினூடாக மட்டுமே வென்றெடுக்க முடியும் என்ற கருத்து மாணவர்களிடையே உருவெடுத்த வேளையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய முதலாவது ஆயுதப்போராட்ட இயக்கமான "தமிழீழ விடுதலை இயக்கத்தின்" (இளைய TELO அல்ல) ஸ்தாபகர்களில் ஒருவராக செயல்பட்டதுடன் அதனை ஒரு புரட்சிகரமான போராட்ட நடவடிக்கைகளுக்கு நகர்த்த முனைந்த சித்தாந்தத் தோழர்களில் தோழர் நாபா அவர்கள் முதன்மையானவராக செயற்பட்டார். இவ்வகையான முயற்சிகள் யாவும் பெரும்பான்மையானவரிடையே காணப்பட்ட சித்தாந்தத் தெளிவின்மை, வர்க்கக்குணாம்சமற்ற வெறும் தேசிய உணர்வு, இளைஞர்களிடையே இயல்பாகக் காணப்படும் குணாம்சங்கள் போன்றவைகள் காரணமாக இலக்குகளற்று செயல

www.padippakam.com


ற்று தன்மைக்கு சென்றது இவ்வகையான குழப்பகரமான சூழ்நிலைகள் உருவாகியபோதும் தோழர் நாபா அவர்கள் மேலும் தன்னை சித்தாந்த ரீதியாக செழுமைப்படுத்துவதிலும் ஈழத்தில் முற்போக்கு அரசியலை வளர்த்தெடுப்பதிலும் அயராது உழைத்து வந்தார்

இக்கால கட்டத்தில் சிறிலங்கா கூலிப்படைகளினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து பெற்றோர்களின் நிர்ப்பந்தம் காரணமாக உயர்கல்வி கற்பதற்காக இலண்டனுக்கு அனுப்பப்பட்டார் இக்கால கட்டத்தில் இலண்டனில் உயர்கல்வியை தொடர்ந்து கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் மத்தியில் மார்க்சிச-லெனினிச சித்தாந்த அரசியலின் ஈடுபாட்டின் காரணமாக தமிழ் பேசும் மக்களின் விடுதலையை சித்தாந்தவியல் ரீதியிலான போராட்டங்களுடன் வென்றெடுப்பதற்கான நோக்கங்களுடன் "ஈழப் புரட்சியாளர்கள் அமைப்பு" ஸ்தாபிக்கப்பட்டது இதன் ஸ்தாபகர்களில் ஒருவரான தோழர் நாபா அவர்கள் ஏனைய தேசங்களில் போராடிக்கொண்டிருந்த தேசிய விடுதலைப் போராட்ட, வர்க்க விடுதலைப் போராட்ட, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட இயக்கங்களிடையும் உறவுகளை வலுப்படுத்தியதோடு சிரியா நாட்டின் போர்ப் பாசறையில் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார் பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய தோழர் நாபா அவர்கள் ஈழத்தில் ஸ்தாபனத்தை வெகுஜன இயக்கமாக கட்டிஎழுப்புவதற்காகவும், ஏற்கனவே தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து செயலற்ற நிலையிலிருந்த முற்போக்கு சிந்தனை கொண்ட தோழர்களை ஸ்தாபனத்துடன் இணைத்துக்கொள்வதற்காகவும் ஏனைய தோழர்களுடன் ஈழத்தின் பல பகுதிகளிலும் வேலைகளை ஆரம்பித்தார் ஈழப்புரட்சி அமைப்பின் ஓர் அங்கமான "ஈழமாணவர் பொது மன்றத்தினூடாக" பேரினவாத அரசின் இனவொடுக்கு முறைகளை சர்வதேச ரீதியாக அம்பலப்படுத்தியதிலும், ஈழ மக்களின் போராட்டங்களின் நியாயங்களை உலகுக்கு உணர்த்துவதிலும், தமிழ் பேசும் மக்களுக்கு போராட்டத்துக்கான விழிப்புணர்ச்சியை அரசியல் வேலைத்திட்டங்களினூடாக ஏற்படுத்துவதிலும், அதற்கான மாணவர்களை அணிதிரட்டியதிலும் தோழர் நாபாவின் பங்கு அளப்பரியது இக்கால கட்டத்தில் தோழர் நாபா அவர்கள் உப்புப் படர்ந்த உடைகளுடன் துவிச்சக்கரவண்டியில் சென்று ஸ்தாபனக் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற வேளைகளில் தனது உடல் நிலைமைகளைப்பற்றியோ அல்லது உடைகளைப்பற்றியோ சிந்திப்பதேயில்லை பாலற்ற தேனீர்களை மட்டுமே அருந்

படிப்பகம்

www.padippakam.com


தீக்கொண்டு தனது வேலைகளைத் தொடர்ந்துகொண்டேயிருப்பார். ஆனால் இவ்வகையான தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்துகொண்டிருந்த பெரும்பான்மையான தோழர்கள் தத்துவம், நடைமுறை, வெகுஜன அமைப்புக்களைக் கட்டுதல் போன்ற விடயங்களில் எழுந்த முரண்பாடுகளின் விளைவாக, 80களின் பிற்பகுதியில் "ஈழப் புரட்சி அமைப்பை"விட்டு வெளியேறி தம்மை"ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி"என்னும் பெயரில் ஸ்தாபித்துக்கொண்டனர்.

அதன் முதலாவது மாநாட்டில் கட்சியின் செயலாளர் நாயகமாக தோழர் நாபா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை புரட்சிகரமான சித்தாந்த நடைமுறைகளுக்கு உட்படுத்துவதுடன் ஈழப்போராட்டமானது தேசிய விடுதலையை வென்றெடுப்பதுடன் வர்க்கப் போராட்டத்திற்கான அடித்தளம் இடப்படுவதற்கான இலக்கை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்பதில் தோழர் நாபா அவர்கள் மிகவும் அக்கறையாக இருந்தார். ஈழ விடுதலையானது மலையக மக்களின் விடுதலைக்கும், சிங்கள உழைக்கும் மக்களின் விடுதலைக்கும் திறவுகோலாக அமைய வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் தென்னிலங்கை சிங்கள முற்போக்கு சக்திகளை இணைப்பதிலும் அவர்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதிலும் அக்கறையாக செயல்ப்பட்டுவந்தார். இவ்வகையாக வென்றெடுக்கப்பட்ட தோழர்களிடத்தில் தோழர் நாபா அவர்கள் மதிப்புக்குரியவராக திகழ்ந்தே வருகின்றார் என்பதுடன் இவ்வகையான உறவுகளின் விளைவாகவே 86களின் நடுப்பகுதியில் சிறிலங்காவின் பாசிச அரசைக் கவிழ்க்க சதிசெய்ததாக ஸ்ரீலங்கா அரசினால் தொடரப்பட்ட சதிவழக்கில் தோழர் நாபா அவர்கள் முக்கிய நபராக விளங்கியதின் காரணமாக இன்றுவரை அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை. சிறிலங்கா அரசின் நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து அவர் பொது மன்னிப்பு பெறவும் விரும்பியதில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜன அமைப்பான EPLF ஐ வளர்த்தெடுப்பதிலும் அதனூடாக மக்கள் மத்தியில் வேலை செய்வதிலும் தோழர் நாபா அவர்களின் தலைமைத்துவப் பங்கு அளப்பரியது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஆரம்பகாலத்திலிருந்து ஈழத்தின் கூலிவிவசாயிகள், சிறு நில உடமையாளர்கள், சீவல் தொழிலாளர்கள் மற்றும் இதர உழைப்பாளர்கள் மத்தியிலிருந்தான நாம் எமது ஸ்தாபன வேலைகளை ஆரம்பப்படுத்தவேண்டும் என்பதில் தோழர் நாபா அவர்கள் அக்கறையாக இருந்ததுடன் இதன் விளைவாக குடாநாட்டில் புலிகளாலும் சாதி அடுக்குத் தட்டின உயர் நிலையி

படிப்பகம்

www.padippakam.com


ருள்ள சமூகப் பிரமுகர்களாலும் அண்மைக்காலங்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை திட்டமிட்ட ரீதியாக சாதி அடிப்படையில் வசைபாடியபோதும் நாம் நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் போராடுகின்றோம் என்பதின் விளைவுகளே இவ்வகையான பிற்போக்குத்தனமான பிரச்சாரங்கள் என்ற உறுதியான கருத்தைக்கொண்டிருந்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாக செயல்பட்டு வந்தபோதும் தான் ஒரு தலைவன் என்ற அடிப்படையில் ஏனைய தோழர்களிடமோ அல்லது மக்களிடமோ பழகியதில்லை அவர் தோழர்களிடம் பழகுகின்ற போது தானுமொரு தோழனாகவே மாறிவிடுவார் அந்தளவுக்கு அவரிடம் அன்பு, பண்பு, கருணை அதைவிட மேலாக மனிதநேயத்தை நேசிக்கும் தன்மை அதிகமாகவே இருந்தது தோழர்களின் குடும்ப நிலைமைகளை கேட்டு அறிந்து அதற்கான வழிவகைகளைச் சொல்வதில்கூட அவருக்கென்று தனித்திறமையான பாணி உண்டு இன்று இருக்கக்கூடிய விடுதலை அமைப்புக்களின் தலைவர்களில் ஈழத்தின் பல பாகங்களிலுமுள்ள மக்களைச் சந்தித்து அவர்களிடம் உரையாடி அவர்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்ட ஒரே தலைவர் தோழர் நாபா அவர்களே. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்களாகச் செயல்பட்டு பொது எதிரியுடன் போராடி மரணங்களைத் தழுவிக்கொண்ட, புலிகளினால் மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி மரணங்களைத் தழுவிக்கொண்ட தோழர்களின் உறவினர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறுவதிலும் அவர்களுடைய துன்பதுயரங்களிலும் பங்கெடுத்துக்கொண்டவர்தான் தோழர் நாபா அவர்கள். இப்படியாக அவரின் அனைத்து நடைமுறைகளையும் உற்றுநோக்கினால் ஓர் உண்மையான மார்க்சிச-லெனினிசவாதிக்குரிய அனைத்துக் குணாம்சங்களையும் நடைமுறையில் காணமுடியும். ஒரு புரட்சிகரமான ஸ்தாபனத்துக்குள் இயல்பாகவே எழக்கூடிய சித்தாந்த, நடைமுறை சம்பந்தமான கருத்து முரண்பாடுகளை ஈழமக்கள் புரட்சிகர முன்னணிக்கே உரித்தான சுயவிமர்சனம், விமர்சனம், ஜனநாயக மத்தியத்துவம் என்னும் அடிப்படையில் களைவதிலும் ஸ்தாபனத்தை முன்னோக்கிய பாதையில் நகர்த்துவதிலும் தோழர் நாபாவின் தலைமைத்துவப் பங்கு அளப்பரியதாகவிருந்தது தோழமை அமைப்புக்களிடம் ஏற்படும் முரண்பாடுகள், பிரச்சனைகள் போன்றவைகளில் மென்மையாகவே விடயங்களைக் கையாளவேண்டுமென தோழர்களைப் பணித்து வந்தார். குறைந்த பட்ச அடிப்படையிலாயினும் எம

படிப்பகம்

www.padippakam.com


க்குள் ஐக்கிய முன்னணி கட்டப்படவேண்டும், அது யாருடைய தனித்துவத்தையும் பாதிக்காத வகையில் கட்டியமைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஐக்கிய முன்னணி வேலைத்திட்டங்களில் அக்கறையுடன் செயல்பட்டுவந்தார்

ஈழமக்களுக்கும் அம்மக்களுடைய போராட்டத்திற்கும் இருக்கின்ற மிகப்பெரிய பலம் ஈழமக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள நட்புறவே இந்தியாவின் நட்பையும் மீறி நாங்கள் போராடுவோம் என்று யாராவது கூறுவார்களானால் அது இன்றைய யதார்த்தத்துக்குப் புறம்பான அதீத கவிச்சல் மனோபாவத்தின் வெளிப்பாடேயாகும். அவ்வாறான நினைப்பானது ஒன்றில் எம்மை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் அல்லது நீண்டகால அடிப்படையில் ஈழப்போராளிகளை சர்வதேச பிற்போக்குவாதிகளின் கையில் வீழ்த்திவிடும் என்ற கருத்தை 85களின் நடுப்பகுதியில் நடைபெற்ற "போர்நிறுத்தமும் பேச்சுவார்த்தையும்" தொடர்பாக மக்களுக்கும் தோழர்களுக்கும் அவர் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார் அவருடைய இக்கருத்து எமது மக்களின் இன்றைய அவலநிலையை அன்றே சிந்தித்திருந்த அவருடைய தூரநோக்கிய சிந்தனையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

புலிகளின் தலைமை வெறியும், பாசிசப் போக்கும், ஏனைய போராட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளை முடக்கியதின் விளைவாக ஈழப் போராட்டம் பின்நோக்கிய நிலைக்கு நகர்ந்தும் எமது மக்களின் இழப்புக்கள் அனைத்தும் இலக்குடையதற்றதாக அதிகரித்த வேளையில் இந்தியாவினுடைய நேரடித் தலையீடு ஏற்பட்டது. எமது மக்கள் நின்று நிதானித்து தங்களுக்கான சரியான பாதையைத் தேர்ந்துகொள்வதற்கும் தற்காலிகமேனும் அமைதியும் சமாதானமும் தேவைப்பட்டன, எமது போராட்டத்தில் அக்கறைகொண்ட அண்டை நாடான இந்தியாவின் மீது கொண்ட நம்பிக்கையின் பெயராலும், இந்தியாவும் பேரினவாத சிறிலங்கா அரசாங்கத்தைப் பற்றி நேரடியாகவே படிக்க வேண்டியதும், தமிழ் பேசும் மக்களின் நீண்டகால நலன்களுக்கு அவசியமானது என்னும் அடிப்படையிலேயே இலங்கை—இந்திய ஒப்பந்தம் தொடர்பான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேதான் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் வடிவத்தை நாம் ஏற்படுத்துவதனூடாக மட்டுமே பேரினவாத சிறிலங்கா அரசின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்த முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார்". ஐக்கிய இலங்கை என்றால் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி, இல்லையேல் சுதந்திர ஈழம்" என்பதே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை

www.padippakam.com


முன்னணியின் நிலைப்பாடும் ஆகும் என்று வெளி உலகிற்கு அம்பலப்படுத்தினார்.

இப்படியாக தனது 39வருட வாழ்நாளில் கடந்த 20வருட காலத்தை பலவகையான போராட்டங்களினூடாகவும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமைத்துவப் பங்கை ஏற்று வழிநடத்தியதினூடாகவும் பசி, பட்டினி, உறக்கமின்மை, எப்போதுமே மக்களைப் பற்றியும் ஸ்தாபனத்தைப் பற்றியும் சிந்திப்பதிலும் தனது வாழ்நாளைக் கழித்துவிட்ட தோழருக்கு வேறு எந்த தனிப்பட்ட நலன்களும் இருந்ததில்லை. அவர் அதிகமாகவே நேசித்த அனைத்து ஒடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற மக்களுக்கான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் சேவையாற்றியதின் பயனாக தென்னாசியப் பிராந்தியத்தின் அண்மைக்கால தலைசிறந்த இடது சாரித் தலைவனாக பெயரெடுத்துக்கொண்டார். தென்னாசியப் பிராந்தியத்தை தனது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்க முனையும் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு எதிராக செயல்படுபவர்கள் பலியெடுக்கப்பட்டது வரலாற்றில் ஒன்றும் எமக்குப் புதியவிடயமல்ல. ஏகாதிபத்தியத்தின் ஈழத்து வாரிசரான புலிகளினால் பலியெடுக்கப்பட்ட எமது பாசத்திற்கும் மதிப்புக்குமுரிய தோழரே, உங்களது மரணம் எம்மைச் சோர்வடையச் செய்யவில்லை மாறாக நீங்கள் மிகவும் நேசித்த மக்களுக்காகவும், நீங்கள் நேசித்த இலட்சியங்களுக்காகவும் போராடுவதற்கு எமது இலட்சியங்களைத் தட்டியெழுப்பியுள்ளன. உங்களைப் பாசத்துடன் நாபாத் தோழரென நேசித்த பல ஆயிரம் தோழர்கள் உங்களது இலட்சியங்களை வென்றெடுப்பதற்கு அணிவகுத்து நிற்கின்றனர் வரலாறு என்றுமே பின்னோக்கி நகர்வதில்லை. ஆம் தோழரே நாம் வரலாற்றை படைப்பவர்கள் உங்களது இழப்புக்களின் பதிலை இனிவரும் வரலாறுகள் எழுதும். தோழரே அதுவரையில் உங்களுக்கான எமது சிவப்பு வணக்கங்கள்.

மனித நேயம் கொண்டவனே
மதிநுட்ப வல்லவனே
மகத்தானவராய் உழைக்கும் மக்கள்
மலையென உயர்ந்து நின்றிடவும்
மங்கையர் வாழ்வு சிறந்திடவும் —மாந்தர்
மடமையொழிந்து வாழ்ந்திடவும்
மலிந்து கிடக்கும் பாசிசத்திற்குசாவு
மலரவேண்டும் மானுட விடியலை
மண்ணின் மைந்தனாய் மடிந்தவனே
மக்களை வென்றவர் மறைவதில்லை
மரணம் அவர்களை வெல்வதில்லை



# மரணத்தை வென்ற அரசியல் வல்லுனன்

க. பின்னவன்

சமூக அரசியல் பொருளாதார விடுதலைகளிலிருந்தே மனிதவாழ்வின் சிறப்பம்சங்கள் உரம் பெறுகின்றன. இந்த உரமான வாழ்வை மக்கள் பெறவேண்டும் என்பதற்காக தம்மையே அர்ப்பணித்த உண்மையாக உழைத்தவரொவ்வொருவரும் சுரண்டல் வர்க்கங்களாலும் ஒடுக்குமுறையாளர்களாலும் பாசிசபயங்கரவாதிகளாலும் உருத்தெரியாமல் சிதைக்கப்பட்டுள்ளார்கள் இவ்வுண்மைகள் வரலாறுகளாக எம்முன் குவிந்து கிடக்கின்றன இருப்பினும் இக்கொலைகளும் அழிப்புகளும் இன ஒழிப்புகளும் சிந்தனையாளர்களையும் செயல் வீரர்களையும் புரட்சியாளர்களையும் வென்றுகொண்டு விட்டதாக எந்த தேசத்தின் வரலாறுகளும் எழுதிமுடிக்கப்பட்டு விடவில்லை அந்தவகையில் சுமதனம் போன்ற பாசிசக் கொலைக்கும்பலின் பயங்கரவாதத்திற்கு சென்னைப்படுகொலையில் பலியானவர்களில் தோழர் சங்கரியும் ஒருவர் இக்கொலை மூலம் அவர் சிந்தனையாளர் செயல்வீரர் புரட்சியாளர் கொள்கைப்பிடிப்பு மனிதநேயம் உள்ளவர் தேசப்பற்றுநிறைந்த இலட்சியவாதி என்பவைகளை கொலைகாரர் உலகுக்கு காட்டியுள்ளனர். அதனால் அவருடைய செயல்நடைமுறைகளை நாம் கற்க வேண்டியுள்ளது.

இவருடைய வாழ்க்கைப்பருவம் எமது விடுதலைப்போருடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. ஈழமாணவர் பொதுமன்றத்தின் ஆரம்பகர்த்தாக்களில் இவரும் ஒருவர் இவர் இங்கிலாந்திலிருந்த காலத்தில் அங்கே வாழ்ந்த ஈழமாணவர்களை தாபனமயப்படுத்தி எமது விடுதலைப்போராட்டத்திற்கான சிந்தனையை செயல்ரீதியான நடைமுறைகளில் ஈடுபடுவதற்காகப் பாடுபடுவதில் பெரும்பங்காற்றியவர் இவர் இலண்டனில் கல்வி கற்ற காலங்களில் தமது கல்வி அபிவிருத்திகளுக்கும் அபிலாசைகளுக்கும் உழைக்கும் மக்களி

www.padippakam.com


றைந்திருந்த ஐரோப்பிய சூழலில் தன்னை வேறுபடுத்தி, தனது சொந்தத் தேசத்தில் வாழும் சுரண்டப்படும் ஒடுக்கப்படும் உழைப்பாளி மக்களின் விடுதலைக்காக அமைப்பு ரீதியான போராட்ட சிந்தனையையும் அதையடையும் வழிமுறைகளையும் கொண்டிருந்தமை இங்கே நினைவில் நிறுத்தவேண்டியது. மேலும் ஈழப் புரட்சி அமைப்பின் நடைமுறை யதார்த்தங்களில் தோன்றிய தவறுகளினால் ஜனநாயகரீதியில் சுதந்திரமாகப் பிறந்த 1981இல் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோற்றம் பெற்றது. இந்த முன்னணியின் தோற்றத்தில் ஈழ மாணவர் மன்றத்(GUES)தின் தலைமைப் பங்கை ஏற்றிருந்த சங்கரியின் சிந்தனைத்திறனும் முடிவெடுக்கும் ஆற்றலும் தூரநோக்கும் மறக்காது மனங்கொள்ள வேண்டியவை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரலாற்று ரீதியான இயங்கியலின் பரிமளார்ச்சியும், காலத்தின் தவிர்க்க முடியாத தேவையும் என்பதை சங்கரியின் செயல் நடைமுறை தத்துவ பூர்வமாக நிரூபித்து விட்டது. இதனை ஈழப் புரட்சி அமைப்பின் இன்றைய தலைமையில்லாத சந்தர்ப்பவாதத் தன்மை வெட்டவெட்டாற்போல சுட்டிக்காட்டியுள்ளது.

இவர் ஒரு பட்டயக் கணக்காளர். (CHARTERED ACCOUNTANT.) மனைவி மக்கள் குடும்பம் என்ற அந்தஸ்துக்களைக் கொண்டவர். தனது கல்வியை முடித்துக் கொண்டு இங்கிலாந்திலேயே வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொண்டவர். அங்கேயே வாழ்விட வசதிகளையும் அமைத்துக் கொண்டவர். இத்தனையும் இருந்தும் ஈழத்தின் போராட்ட சூழ்நிலையைக் காரணமாக்கி புத்திஜீவிகள் எழுத்தாளர்கள் முற்போக்காளர்கள் என தம்மை இன்று இனங்காட்டிக் கொள்ளும் அத்தனை பேரும் கூட்டம் விட்டுக் கண்டங்கள் தாண்டி தமது உடைமையையும் அதிகாரத்தையும் பேண

குடும்பங்களுடனும் தனியாகவும் தஞ்சம் கோரி ஐரோப்பா அவுஸ்திரேலியா அமெரிக்கா என வந்து குவிந்த காலத்தில் இவர் இவர்கள் எல்லோருக்கும் எதிராக, உயிராபத்து நிறைந்த சூழலில் வாழ்ந்த தேச மக்களின் விடிவுக்காக ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கு (நமது தேசத்திற்கு) சென்று உழைத்தவர். இந்தத் துணிவும் தூக்கமற்ற இயக்கமும் அவர் போன்ற புரட்சியாளர்களுக்கன்றி ஏனையோர்க்கு இல்லை. ஆகவே அவர் ஒரு புரட்சியாளர்.

இவர் அவ்வாறு அங்கு சென்று சேவை செய்ய முன்வந்தமைக்கு அவரின் அசைக்க முடியாத கொள்கைப் பற்றும் ஸ்தாபன விசுவாசமுமே காரணம். உழைக்கும் மக்களின் உயர்வுக்கா

www.padippakam.com


களும் பொருளாதாரச் சமநிலையற்ற சாதிநெறிமுறையிலான சமூகத்தின் மாறுதலுக்கும் இறுதிவரை போராடுவோம் என்று தானு சார்ந்த அமைப்பின் உறுதியான கொள்கையிலும் உரமேறிப் போனவர். கொலைமிரட்டல்களுக்கும் சந்தர்ப்பவாதச்சலசலப்புகளுக்கும் அஞ்சாமல் ஜனநாயக நீரோட்டத்தின் மூலம் மக்களுக்கான அமைதி கிடைக்க வேண்டுமென்பதற்காக உருக்குறுதியோடு உழைத்தவர். அமைப்பின் பணிப்பில் தேர்தலில் நின்றார் தெரிவும் செய்யப்பட்டார். தனது சொந்தப்பாதுகாப்பிற்கு உத்தரவாதமில்லாத நிலையிலும் மக்களின் பாதுகாப்பை மனதில் நிறுத்தி மக்களுக்கு சேவை செய்வதை தனக்கு சுமத்தப்பட்ட கடமையாகக் கொண்டு செயலாற்றினார் அதன்மூலம் மக்களுக்கும் தேசத்திற்கும் என் உலகுக்குமே தன்னையும் தான்சார்ந்த அமைப்பையும் இனங்காட்டிக் கொண்ட செயல்வீரர்.

ஆயுதப்போராட்டம் தவிர்க்கமுடியாத நிர்ப்பந்தமாக இருந்த வேளையிலும் பாராளுமன்ற ஜனநாயக வழிமுறைகள் திணிக்கப்பட்ட வேளையிலும் அரசியல் தந்திரோபாய அணுகுமுறைகளினால் சந்தர்ப்பவாதிகளை இனங்காட்டிக்கொள்ள பாடுபட்டார். மரபுவழி அரசியல் தலைவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்ட போது இரந்தலைமுறைகளிலிருந்த தோற்றம் பெற்றவினையற்றவரல்லர்.

இவர் போன்றோரின் அரசியற் தோற்றம் தமிழ் பேசும் இனத்தின் அரசியற்தலைமைக்குள் தலைமுறை இடைவெளி இல்லையென்பதைப்பறைசாற்றி நின்றது. இவருடைய பேச்சும் செயலும் நடைமுறைகளும் இளைஞர்கள் என்றும் எதிரொலிக்கும். பழைய அரசியல்தலைவர்கள் போலல்லாமல் உண்மை, நேர்மை, உழைப்பு என்பவைகளை தாரகமந்திரமாகக் கொண்டு கொள்கைக்காக உழைத்தமையால் வரலாற்றில் தனக்கென்று அழியாப்புகழைப் பெற்றுக்கொண்டார்.

இவருடைய பாராளுமன்ற விவாதங்கள் கருத்தறிக்கைகள் என்பன அவரின் திறமைக்கும் நேர்மைக்கும் மக்கள்மீது அவர் கொண்டிருந்த அக்கறைக்கும் எடுத்துக்காட்டுகளாயமையும். அவற்றில் சிலவற்றை நினைவு கூருவோம்.

மாகாணசபையா மாகாணஅரசா என்றபதங்கள் சர்ச்சைக்குள்ளாகி மாகாண அரசு என்ற பதம் பொருத்தமற்றது, எந்தவொரு நாட்டிலும் இரு அரசுகள் எப்படி இடம் பெறமுடியும் என்று அரச தரப்பினர் குரலெழுப்பிய போது

ஒரு நாட்டில் ஏன் இருஅரசுகள் இருக்கமுடியாது அமெரிக்காவில்

www.padippakam.com


52அரசுகள், சோவியத் நாட்டில் 15குடியரசுகள், அண்மைநாடான இந்தியாவில் 23மாநில அரசுகள் இருக்கும்போது இங்கு மட்டும் ஏன் முடியாது இவைகளைப் பற்றி சரியாகத்தெரியாதவர்கள் நல்ல அரசியல் விற்பன்னரயாரிடம் கேட்டு தெரிந்து கொள்வது நல்லது எனக்கூறி எல்லோர் வாயையும் அடக்கிவைத்தார்.

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டம் நீக்கப்படுவது தமிழ்பேசும் இனத்திற்கு நன்மையளிக்கும் விடயமாகும், ஆனால் அதைநீக்கும்படி கோருபவர்கள் விடுதலைப்புலிகள் அவர்கள் தமது சொந்த நன்மைகருதியே கோருகிறார்கள். அதன் உடன்படிக்கையும் அதன் எதிர்விளைவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியருக்கு பாதக விளைவை தோற்றுவிக்கலாம் என்றுதெரிந்தும், தமிழ் பேசும் மக்களுக்கு நன்மைதரும் எந்தத் திட்டத்திற்கும் ஜெனைக்கும் ஆதரவளிப்போம். இப்பிரேரணைக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிப்போம். நாங்கள் வாக்களிக்காது விடின் ஆறாவது திருத்தச்சட்டம் நீக்கப்படாத நிலை உருவாக அனுமதியோம் என்றகருத்தை பகிரங்கமாகக் கூறிவைத்தார்.

இவர் படுகொலை செய்யப்படுவதற்கு 24மணித்தியாலங்களுக்குமுன் பாராளுமன்றத்திலாற்றிய உரையில்
புலியொழிப்பு நடவடிக்கைகளால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது. இராணுவ நடவடிக்கைகள் மக்கள் ஆதரவைப்பெறக்கூடியதாக அமைய வேண்டும் இந்த யுத்தத்தில் பாசிசவாதிகளையொழிக்க அரசு எடுக்கும் நடவடிக்கையை, பாசிசவாதிகள் அழிக்கப்படாதவரைக்கும் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் அமைதி என்ற பேச்சுக்கே இடமில்லை என்னும் நோக்கில் நாம் ஆதரிக்கின்றோம் எனக்கூறினார்.

பாசிசத்திலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்பதற்காகப் போராடிய தோழர் சங்கரி பாசிசத்திற்கே பலியானார்.

இவைகள் மூலம் மக்கள் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறையையும் உறுதியையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இவருடைய பார்வைகள் எல்லாம் தாபனத்தின் பார்வையாகவே இருந்தது. அவர் வேறு தாபனம் வேறு என்று பிரிக்கமுடியாது இரண்டறக் கலந்திருந்தார். வர்க்கப் போராட்டத்தின் அமைப்புரீதியான வேலைத் திட்டங்களுடன் தன்னையும் இணைத்துக்கொண்டார் தோழர் சங்கரி. ஒரு தேசியவாதி எங்கள் தேசத்தின் அகம், புறச் சூழலுக்கும் புவிசார் மக்கள் வாழ்க்கை வசதிகளுக்கும் ஏற்பவே போராட்ட நடைமுறைகள் நெறிப்படுத்தப்படவேண்டும் என்ப

www.padippakam.com

தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் மனித நேயம், புரிந்துணர்வு நேர்மை, விசுவாசம், சேவை என்ற அடிப்படையிலேயே எல்லோருடனும் பழகினார். அதனால் அமைப்புக்குள்ளும் பாராளுமன்றத்திலே மக்களிடமும் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுக்கொண்டார்

பேச்சால் செயலால் மட்டுமன்றி எழுத்தாலும் தன்னை இனங்காட்டிக் கொண்டார் "ஈழமாணவர் பொது மன்றத்தின்" தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில் அதன் வெளியீடான "ஈழமாணவர் குரல்" மற்றும் கட்சிப் பத்திரிகைகளிலும் அவரின் எழுத்தின் ஆற்றலையும் இனங்காணக்கூடியதாகவிருந்தது. இருள் அடைந்து ஒளிபெறாத உணர்வற்றிருக்கும் சமூகத்தின் உணர்ச்சிகளைத் தொட்டுக் காட்டுவதற்கு எந்தளவுக்கு தன்னால் முடியுமோ அந்த வரையில் முயற்சி செய்திருந்தார். இவர்போன்ற திறமையும் ஊக்கமும் அவர்போன்ற சிந்தனையாளர்களுக்கே உரித்தானவை.

இப்படி எல்லாம் தான் தோற்றம் பெற்ற சமூகத்தின் தேசத்தின் மக்களின் விடிவுக்கான வெளிச்சத்தை தேடிப் பறந்த விட்டில்களைச் சுட்டுப் பொசுக்கியதால் கொலைகாரர்கள் எதைச் சாதித்து விட்டார்கள். மாறாக அவர்களின் கொள்கையையும் அவர்களையும் உலகம் உள்ளளவும் மறவாத நிலையைத் தோற்றுவித்துவிட்டார்கள். யாருமே தொட முடியாத உயரத்திற்கு அவர்களை உயர்த்திவிட்டார்கள். ஆம் அவர்கள் உயர்ந்தவர்கள்தான். ஏனெனில் உழைப்பாளிகள் உயரவேண்டும் என்று உண்ணாத உறங்காத உழைத்தவர்கள் அதனால் மரணம் அவர்களை வென்றுவிடவில்லை.

## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் வெகுஜனம் பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செழுமையாக்கவும் திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு என்பதைத் தோழமையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

VEKUJANAM
Mittwegstr. 21
4300 ESSEN 1
WEST GERMANY

படிப்பகம்



# பாசிசத்தின் சிம்மசொப்பனம்

ப. சுந்தரமூர்த்தி

ஆயுதக்கவர்ச்சியிலும் இனஉணர்விலும் அடிமைப்பட்டு ஈழவிடுதலைப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியவர்கள் ஏராளம், ஏராளம். இதன் விளைவு இன்று போராட்டமே திசைமாறி திக்குத் தெரியாமல் பரிதவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசியல் தெளிவுடனும் மார்க்சிச—லெனினிச சித்தாந்த கொள்கை விளக்கத்துடனும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் சமுதாய விடுதலையையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து சீராக அரசியல் வரலாற்றுப் பங்களிப்பு செய்தவர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும். அப்படி விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோடு தன்னை இணைத்துக்கொண்டு இறுதிவரை மக்களுக்காக வாழ்ந்து பாசிசத்திற்கு பலியாகிப்போன கிழக்குத் தந்த சிறப்பு மகன் தோழர் கிருபாவம [illegible]

மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் பிறந்த தோழர் இந்தக் கல்லூரியில் கல்வி பயின்றார். தோழர் கிருபா ஈழ மாணவர் பொது மன்றத்தின் (GUES ) மூலம் ஈழமாணவர்களை போராட்டத்தில் ஈடுபடுத்த ஆற்றிய பங்கு மகத்தானதும் என்றும் நினைவு கூரப்பட வேண்டிய ஒன்றுமாகும். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவர் பிரிவாக இயங்கி மாணவர்கள் மத்தியில் துளிர்விட்ட "ஈழமாணவர் பொது மன்றமே" பின்பு ஏனைய விடுதலை அமைப்புக்களுக்கும் மாணவர் அமைப்புக்களை தோற்றுவிக்க வழிசமைத்தது. அரசியல் தெளிவும் தூரநோக்குமற்ற வழிநடத்தல்களால் தோற்றுவிக்கப்பட்ட மாணவர் அமைப்புக்களால் பிற்காலத்தில் மாணவர்கள் கல்வியுமற்று போராட்டமுமின்றி சின்னாபின்னப்பட்டுப் போயினர்.

கிழக்கு மாகாணம் இனவெறி அரசின் கட்டுக்கடங்கா இன விரோத நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளானது. பலமுறை தமிழ் பேசும் மக்கள் இனவெறி இராணுவத்தினராலும் சிங்கள வெறிக்

குண்டர்களாலும் அழிவுக்குள்ளாக்கப்பட்டனர். பின்னாலும் தந்திரோபாயத்தை கையாண்ட பாசிச அரசு முஸ்லீம் மக்களையும் தமிழ் மக்களையும் மோதவிட்டு இனக்கலவரங்களை, மதக்கலவரங்களை எரியவிட்டது மேலும். தமிழ்பேசும் மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு சிங்களக் குண்டர்களை குடியேற்றி சிங்கள மயமாக்கும் திட்டத்தை அரசு திரைமறைவில் அரங்கேற்றியது. இப்படியான இன்னல்களுக்கு மத்தியில் உள்ளான மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்து மக்கள் சக்தியை தம்பக்கம் இழுத்துக்கொண்டு நேர்மையான அரசியல் தலைவராய் நிமிர்ந்து நின்றவர் தோழர் கிருபா.

அரசியல் நடவடிக்கைகளுக்கூடாக மக்களுடன் குழந்தைபோல் சிரித்து பேசி உதவி செய்யும் தன்மைகளாலும் ஐயங்களைக் கேட்டறிந்து நிவாரணம் தேடும் சுபாவத்தாலும் மக்கள் மத்தியில் மலையாய் உயர்ந்து நின்றதால் இனவெறி அரசுக்கும், பாசிசப் புலிகளுக்கும் சிம்மசொற்பனமாய் விளங்கினார் தோழர் கிருபா.

மக்கள் சக்தியை தம்பக்கம் கொண்டிருந்தமையால் இலங்கையில் நடந்த மாகாண சபைத் தேர்தல்களில் கூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களுள் இலங்கையிலேயே இரண்டாவது இடத்தை தட்டிக்கொண்டதோடு வடகிழக்கு மாகாண அரசின் நிதிமந்திரியானார் தோழர் கிருபா.
மாகாண சபை வெறும் பூச்சாண்டியாக நினைத்த இலங்கை அரசுக்கும் [illegible] போல் இனி இந்தப் பொம்மைகளால் என்ன என்று நினைத்தவர்களுக்கும் சாட்டையடிக்கும் விதத்தில் வடகிழக்கு மாகாண அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து சபையில் சமர்ப்பித்து பெரும் வரவேற்பைப் பெற்றதோடு எம்மால் ஆள முடியும் நாம் மக்கள் தலைமையை ஏற்க தகுதியுள்ளவர்கள் என்று நிரூபித்துக் காட்டியவர் தோழர் கிருபா.

வரவு செலவுத் திட்ட உரையை மாகாண அரச சபையில் சமர்ப்பித்தபோது "பாசிசம் எவ்வளவுதான் வல்லமையுடையதாக இருந்தாலும் அறிவுள்ள ஜனநாயகமும் விரும்பும் ஒரு சமூகம் அப்பாசிசத்திற்கு பணிந்து போகமுடியாது" என்று கூறிவைத்தார் தோழர் கிருபா. வெறும் சந்தர்ப்பவாதக் கூட்டங்களையும் ஆயுதப்பிரியர்களையும் சிந்திக்க வைக்கும் அர்த்தமுள்ள நாம் என்றும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டிய வாசகம் இது.

பாசிசத்தை இறுதிவரை வெறுத்து எதிர்த்த பாசமிகு தோழர் பாசிசத்திற்கு பலியானாலும் எமது மக்களின் விடுதலையில் தோழர் கிருபாவின் அரசியல் நினைவுகள் நீங்கா இருக்கும்.

www.padippakam.com



# அந்த மாலைப் பொழுதில்---

அ. வேலாயுதம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா, வடகிழக்கு மாகாண அரசின் நிதி அமைச்சரும் மத்தியகுழு உறுப்பினருமான தோழர் பெ. கிருபாகரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தோழர் க. யோகசங்கரி உட்பட 14 முன்னணித்தோழர்களை சென்னைக் கோடம்பாக்கத்தில் நிராயுதபாணிகளாக வைத்து நரபலி எடுத்த விடுதலைப் புலிகளின் பாசிசச் செயலுக்கு எதிராக 30.7.90 சனிக்கிழமை மாலை ப்மலியாவல் ஸருட்நாட் நகரில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர், அதன் ஆதரவாளர்கள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்கள், ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்தோர், பாசிச எதிர்ப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

கூட்டம் தொடங்கும்போது தோழர் க. பத்மநாபா அவர்கள் 1985ம் ஆண்டு ஈழம் வாழ் மக்களுக்கு ஈழ வானொலியூடாக வெளியிட்ட செய்தி மறு ஒலிபரப்பு செய்யப்பட்டது. அன்றே "ஐக்கியம் எமக்கு இன்று முக்கியம்" என்ற அறைகூவலை விடுத்தார். பொது எதிரிக்கு எதிரான அந்த ஐக்கியத்துக்காக எவ்வெவ் வழிகளில் எவ்வாறு பாடுபட்டார் என்பதை வரலாறு எமக்கு காட்டிநிற்கும். சுதந்திரத்துக்காக போராடும் உரிமை மறுக்கப்பட்டு புலிகளால் மரணிக்கப்பட்டவர்களின் சிறப்பியல்புகளை, கொள்கை அடிப்படையிலும், கட்சி அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் பலரும் எடுத்துக்கூறினர். தமது கொள்கையின் அடிப்படையில் எமது சமூகத்தினதும் உழைக்கும் மக்களினதும் விடிவுக்காக ஒளிவு மறைவு இன்றி உண்மையாக எப்படியெல்லாம் அவர்கள் உழைத்தார்கள் என்பதையும் அதற்காக ஏற்படுத்திக்

www.padippakam.com

கொண்ட அரசியல் வடிவங்களையும் அணுகுமுறைகளையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் எடுத்துக் கூறினர்.

பலவகையான போராட்டங்களினூடாக வளர்ந்த இப்படியான அனுபவசாலிகளை படுகொலைகள் செய்வதினூடாக புலிகளினால் எதைச்சாதிக்க முடியுமென கருதுகிறார்கள். என்றும் அவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் இடைவெளிகளைத்தான் ஏற்படுத்த முடியும் இவ்வகையான போக்குகளுக்கு ஏனைய சக்திகளிடம் காணப்படாத ஐக்கியமும் காரணமாகும். புலிகளின் பாஸிசத்திற்கு எதிராக போராட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழீழ விடுதலைக் கழகத்தின் சார்பில் பேசியவர் குறிப்பிட்டார். இத்தோழர்கள் ஒவ்வொருவரின் தனித்துவங்களையும் மனிதப் பண்புகளையும் செயல்திறன்களையும் அவர்களை நேரில் சந்தித்தவர்கள் பழகியவர்கள் என்ற அடிப்படையில் சிலர் தங்களின் அனுபவரீதியான உண்மைகளைக் கூறி வியந்தார்கள். "மக்கள் சாகிறார்கள்" "மக்களுக்காக சாகிறார்கள்" என்ற சொற்பதங்கள் மிகவும் நுணுக்கமாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் அக்கூட்டத்தில் கூறினார்கள். பாஸிசத்திற்கு எதிராகப் பலரும் குரல்கொடுத்தார்கள். பாஸிசம் அழிக்கப்படுவதற்காக ஒன்றுபடுதல் தவிர்க்கப்பட முடியாதது என்பதும் இறுக்கிக் கூறப்பட்டது.

பாசிசம் இறுதிவரை, வென்று வெற்றிக்கொடி நாட்டியதாக உலக வரலாறுகள் இல்லை ஆகவே பாஸிசத்திற்கெதிராக ஒன்றுபட்டு எழுதவேண்டியது மனிதாபிமானம் உள்ள ஒவ்வொரு எழுத்தாளரின் கடமையும் கூட. மக்கள், சுதந்திரம், புரட்சி, மனிதநேயம், கொள்கை என்று எழுதும் எழுத்தாளர்கள் பாஸிசத்திற்கெதிராக மாசு மறு இன்றி எழுத முற்படின் இக் கொலைச் செயல்கள் கண்டிக்கப்படாமைக்கு எப்படி இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியும்

நாரன்பேக்கிருந்தும் அஞ்சலிக்காக ஆதரவாளர்கள் வந்திருந்தார்கள் இவர்கள் வருகையின் தாமதத்தால் குறித்த நேரத்தில் கூட்டம் கூடப்படவில்லை கூட்டத்தில் ஊருட்காட்டைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் வரவில்லை இதைப்பற்றி பேச்சாளர் ஒருவர் குறிப்பிடும்போது பயமும் காரணமாகவும் மக்கள் வராதிருக்கலாம் என்றார். ஆகவே கூட்டத்திற்கு வந்தவர்கள் எந்த அச்சமும் இல்லாதவர்கள். இவர்கள் வீரர்கள். மறைந்த தோழர்களுக்கு இவர்களால் செய்யப்பட்ட அஞ்சலியும் வீர அஞ்சலியே இரவு 9 மணியளவில் கூட்டம் கலைந்தது.

படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ச்சித் தொடரிலும் சஞ்சிகைகள் தொடர்பான வாசகர்களின் விமர்சனப்பகுதியில் ஆக்கதாரர்களும் ஆசிரியர்களுமே அதிகமாக கலந்துகொண்டனர். ஏலையா, தூண்டில், அக்னி, புதுமை, வெகுஜனம், மண் ஆகிய சஞ்சிகைகள் விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. "உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி" என்னும் தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இருவரினது கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன. இக்கட்டுரை தொடர்பாக திரு பரராஜசிங்கம் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் நான் இங்கு வெறும் எலும்புக் கூட்டைத்தான் தந்துள்ளேன். இது ஒரு பெரிய விடயம், ஒரு நாளுக்கு மேலாகக்கூட விவாதிக்கக்கூடிய விடயம் இக்கட்டுரை தொடர்பாக யாரும் விவாதிக்கலாம் என்றும் குறிப்பிட்டார் இவரைத் தொடர்ந்து அடுத்த கட்டுரையை வாசித்த திரு அலெக்ஸ்குறிப்பிடுகையில் இக்கட்டுரையானது எமது சமூகத்தின் வளர்ச்சியின் பின்னடைவுக்கான பார்வையின் முதற்படியாகவே கருதுகிறேன் என்று குறிப்பிட்டார். இக்கட்டுரைகள் தொடர்பாக சிவிலோகன், பத்மநாதன், செல்வராஜா, முருகதாசன் போன்றவர்களின் விமர்சனங்கள் ஆரோக்கியமானதாய் இருந்தன. சிவிலோகன் அவர்கள் குறிப்பிடுகையில் சமூக விஞ்ஞானம் பற்றிய பார்வையை கொண்டிருந்தவர்களில் திருவாளர்கள் கார்த்திகேசன், பீற்றர் கெனமன், சண்முகதாசன் போன்றவர்களையும் குறிப்பிட்டிருக்கலாம் என்பதுடன் விதேசியம் பற்றிய விளக்கத்தையும் குறிப்பிட்டிருப்பின் மேலும் கட்டுரை செழுமை அடைந்திருக்கும் என்று குறிப்பிட்டார். திரு பத்மநாதன் குறிப்பிடுகையில் உற்பத்தி உறவு முறைகளிலேதான் சமூகத்தின் சமகால வளர்ச்சிப்போக்கு தங்கியுள்ளது. இது மிகவும் ஆழமாக ஆராயப்படவேண்டிய விடயம். இது வலைப்பின்னல் என்கின்ற வடிவமைப்புக்குள் பிரச்சனைக்கான கூறுகள் பொதிந்து கிடக்கின்றது என்று விபரித்தார். திரு முருகதாசன் அவர்கள் குறிப்பிடுகையில் அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தின் கல்வி அறிவிற்கும் அவருக்கு கிடைத்திருந்த சமூக அந்தஸ்திற்கும் அவர் சமூகம் பற்றி கொண்டிருந்த பார்வைக்கும் உள்ள இடைவெளியை கட்டுரையாளர் வெளிப்படுத்தியதை பாராட்டியதோடு இக்கட்டுரையில் சாதியத்தின் அடிப்படைத்தத்துவமான பிராமணத்துவத்தின் வர்ணாச்சிரமத்தத்துவத்தையும் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். திரு செல்வராஜா அவர்கள் குறிப்பிடுகையில் யாழ் அகற்றச் சங்கங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து குடியேறிய பிரமுகர்களே தங்கள் நலன்களுக்காக மட்டக்களப்பிலும், வன்னியிலும் அமைத்தார்கள் என்று குறிப்பிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com


"மலையக மக்களும் நாங்களும்" என்னும் தலைப்பிலான நிகழ்ச்சியில் திரு வேலாயுதம் அவர்களின் கட்டுரைக்கு பல ஆரோக்கியமான விமர்சனங்களும், விமர்சனம் என்னும் போர்வையில் கடந்தகால அரசியல் காழ்ப்புணர்ச்சிகளின் அடிப்படையிலான கருத்துப்பிரயோகங்களும் வெளிவந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இருந்தும் ஒரு வர்க்கப்போராட்டத்துக்கான தேவைகளுடன் இருக்கும் மலையக மக்கள் அவர்களைச்சுற்றியுள்ள சிங்கள உழைக்கும் மக்களுடன் உறவை வலுப்படுத்துவதா? அல்லது வடகிழக்கு மக்களுடன் தேசியப் போராட்டத்திற்கான உறவை வலுப்படுத்துவதா? என்ற திரு யதமநாதனின் கேள்வியும் இவ்விவாதங்களின் தொடரில் அமுதம் ஆசிரியரின் கருத்தான தென்னிலங்கையில் பேரினவாதம் அழித்தொழிக்கப்படாதவரை மலையக மக்கள் தென்னிலங்கை சிங்கள உழைக்கும் மக்களுடன் வர்க்கப்போராட்டத்துக்கான உறவை பலப்படுத்துவது சாத்தியமில்லாத காரியம் என்று குறிப்பிட்டார். இவ்வகையான கருத்துக்கள் மலையக மக்களின் உணர்வு பூர்வமான அக்கறைகளின் வெளிப்பாடே என்பதுடன் இவ்விடயம் தொடர்பாக நாம் மலையக மக்களின் பக்கத்திலிருந்து அவர்களின் கருத்துக்களைக் கொண்டுவருவதே ஆரோக்கியமானதாக இருக்க முடியும்.

இங்கு வெளிவந்துகொண்டிருக்கும் "சஞ்சிகைகளில் வெளியான கவிதைகள்" மீதான திரு முருகதாசனின் ஆய்வில் கவிஞர்கள் தமது அரசியல் சார்பு நிலையிலிருந்து பிரச்சனைகளை வெளிக்கொண்டு வருகின்றனர் என்ற அடிப்படையில் அதிகமான கவிதைகளின் ஆய்வு அமைந்திருந்தது. இவர் தனது ஆய்வுக்கு அதிகமான கவிதைகளை எடுத்துக்கொண்டதினால் சரியாக ஆய்வை மேற்கொள்ள முடியாது அவசரப்படும் தன்மை தென்பட்டது. இதைத் தொடர்ந்து திரு சுசீந்திரன் அவர்கள் திரு காங்கேசன் கோவிந்தகுமாரின் கவிதைகளை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்திக்கொண்டார். தென்னிந்திய கவிஞர்கள் சிலரிடையே காணப்படும் சொற்களைத்தேடி அலையும் தன்மையும், பிரச்சனைகளை வக்கீரதன்மைகளுடன் விளக்க முறபடும் விதமும் இவரினுடைய கவிதைகள் பலவற்றில் காணக்கூடியதாக இருக்கின்றது என்று விபரித்தார் இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து 9வது இலக்கியச் சந்திப்புக்கான செயற்குழுவினரால் இச்சந்திப்புக்கான வரவு செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது அதைத் தொடர்ந்து 9வது இலக்கியச சந்திப்பு தொடருக்கான இடமாக அலன் (ALLE-N) தெரிவு செய்யப்பட்டு அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

www.padippakam.com



# இவர்களும்

சிறுகதை

# காவலர்கள்?

வன்னியூர் லெனின்

சூரியன் மெல்ல மெல்ல கண்களை மூடிக்கொள்ள பசுமை நிறைந்த நெல்வயல்கள் இருளுடன் ஐக்கியப்பட்டுக்கொண்டு இருந்தன. இவ் ஐக்கியத்தை அனுசரிப்பது போல் பறவைகளும் மிருகங்களும் தமது இருப்பிடம் நோக்கி விரைந்துகொண்டிருந்தன. இந்நிகழ்வுகளை இரண்டு வருடங்களுக்குப் பின் ரசித்தவண்ணம் வன்னியூரை அண்டிய கிராமமொன்றினுள் ஆனந் நுழைகிறான். ஆம் அவனும் விடுதலையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்ததால் முதலாளித்துவ போக்குடைய போராளிக்குழு ஒன்றினால் துரோகி என்ற முத்திரை குத்தப்பட்டு சுதந்திரம் மறுக்கப்பட்டவனாய் இந்தியா சென்றிருந்தவன்.

சொந்த நாட்டில் அந்நியனாக்கப்பட்ட ஆனந் எவ்வளவோ இடையூறுகளுக்கு மத்தியிலும் தனது நண்பனை சந்திக்க அக்கிராமத்தினுள் நுழைந்து நண்பனின் வீட்டுக்கதவுகளை தட்டுகிறான். கதவை திறந்த ரதீசின் அம்மா ஆனந்தைக் கண்டதும் கட்டியணைத்து அழ ஆரம்பித்தாள். ஒன்றும் தெரியாது திகைத்த ஆனந் சற்று மேலே நிமிர்ந்து பார்க்கிறான். ஆம் அவனது நண்பன் ரதீசின் படத்திற்கு மாலை போட்டு விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. மின்சாரம் தாக்கியது போல் அதிர்ந்து போனான் ஆனந்.

அன்றிரவே ரதீசிற்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொண்டு மீண்டும் இந்தியா செல்வதற்காக கிராமத்து எல்லைக்கருகில் சென்றிருப்பான். திடீரென்று காலடியில் வந்து நின்றது ஒரு மிக்சுபிசி ஜீப். அந்த ஜீப்பில் இருந்து இறங்கியவர்களின் கைகளில் எம்16, ஜீ3, ரி56 போன்ற கொடிய ஆயுதங்கள் காணப்பட்டன.

டேய் நாயே இவ்வளவு காலமாக எங்கேயடா இருந்திருந்தாய்? எங்களை எதிர்த்து இங்கே ஒருவனும் வாழக்கூடாது, வாழவும் விடமாட்டோம். இவ்வாறு ஆயுதம் தாங்கிய ஒருவனின் வீரவசனங்கள் தொடர உதைக்குறக்கூட இன்னொருவன்,
பரதேசி நாயே ஏறடா ஜீப்பிலே என்றான்.

www.padippakam.com

ஷான் இருந்ததை [illegible] கப்பட்டவனாய் ஆனந் ஜீப்பினுள் ஏறுகிறான். ஜீப் விரைந்து சென்று சுற்று மதில் கட்டப்பட்டிருக்க வீடு ஒன்றினுள் நுழைகிறது. அதுதான் அந்த ஆயுதக்குழுவின் அ[illegible] முகாம்.

இப்பொழுது 3ம் இலக்க அறையிலும் துரோகிகள் எனப்பட்டுப் பொறுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13ஆக உயர்கிறது.

இராவணனால் சிறைப்பிடித்து வைக்கப்பட்ட சீதையின் உடைகள் கண்ணீரால் ஈரமடைந்து உடல்வெப்பத்தால் உலர்வதை நினைவு படுத்தும் வகையில் அவ்வறையின் ஒரு மூலையில் ஆனந் காட்சியளிக்கிறான். இப்பொழுது ஆனந்தின் எண்ண அலைகள் நதீஸின் மறைந்த வாழ்க்கையை நோக்கிச் செல்கின்றன.

நதீஸ் இவன் யாழ் இந்துக்கல்லூரியில் 6ம் வகுப்பில் இருந்து 8ம் வகுப்பு வரை படித்து விட்டு நாட்டுப்பிரச்சனை காரணமாக மீண்டும் கல்வியை தொடர வவுனியா மகாவித்தியாலயம் வந்திருந்தான். இந்நேரத்தில்தான் ஆனந்தும் நதீஸும் நண்பர்களானார்கள். நதீஸ் நன்றாகப்படிக்கக்கூடியவன். எந்நேரமும் புத்தகமும் கையுமாகத்தான் இருப்பான்.

மாலைநேரம் காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. நதீஸ் மாமரத்தடியில் படித்துக்கொண்டிருக்கிறான். நதீஸ் உங்களுக்கு பானுவைத்தெரியுமா? பானு உங்களைப்பற்றி என்னிடம் விசாரித்தாள், என்றவாறு நதீஸின் அக்கா சுபா மாமரத்தடிக்கு வருகிறாள்.

பானுவா அது யார் சுபாக்கா?

இவ்வாறு இவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும்போதே சுபாக்கா என்று கூப்பிட்டுக்கொண்டே வருகிறாள் பானு.

அப்பொழுதுதான் நதீஸ் அவளை முதல் முறையாகப் பார்க்கிறான். வானொலியில்

அம்மன் கோயில் தேரழகு ஆயிரத்தில் ஓரழகு

என்னும் பாடல் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பானு— இவள் நினைத்ததை உடனே செய்ய வேண்டும் என்னும் சுபாவம் கொண்டவள். சிரித்துக் கலகலத்துக் குழந்தை போல பேசக்கூடியவள்.

பானு நதீஸைப்பற்றி முன்பே அறிந்து வைத்திருந்தாள். மாமரத்தடியில் நதீஸ் பானு இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விட்டு நிலத்தில் இருக்கும் பூக்களைப்பார்க்கிறார்கள். அப்போது சுபா

www.padippakam.com

மாமரத்தடியைவிட்டு மெதுவாக நகர படலைப்பக்கம் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

எப்ப தொடங்கியடா இந்தப்புதுக்கதை

என்றவாறு அவனது நண்பர்கள் வருகிறார்கள்.
இருவரும் சு. . . சுபாக்கா என்கிறார்கள்.
என்ன இருவரும் களவா காண்கிறீர்கள்

என்றான் வசந்தன். உடனே பானு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டாள்.
ரதீசும் பானுவும் காதலிக்கிறார்கள் என்ற செய்தி ரதீசின் நண்பர்கள் மூலமாக பாடசாலையில் பரவியது. பானுவிற்கு ரதீசிடம் தனது விருப்பத்தை உண்மையிலேயே சொல்லவேண்டும் என்ற எண்ணம் வருகிறது.

இன்றைக்கு எப்படியாவது தனது விருப்பத்தை ரதீசிடம் கூறிவிட வேண்டும் என உறுதியாய் முடிவெடுத்துக்கொண்டு ரதீஸ் பாடசாலைக்கு செல்லும் ஒழுங்கைக்குள் மெல்ல மெல்ல நடந்து செல்கிறாள் பானு. பாடசாலை தொடங்கும் நேரம் ரதீசின் சைக்கிள் விரைந்துகொண்டே செல்கிறது. இடையே பானு வெளிப்படுகிறாள்.
ரதீஸ் மெதுவாகவும் அன்பாகவும் அமைதியான
திடீரென்று திரும்பிப் பார்க்கிறான் ரதீஸ். பானுவைக்கண்ட அந்த கணத்திலேயே அவனுடைய முகத்தில் நேச உணர்வுடன் ஒரு புன்னகை உதிர்ந்தது. சொல்லுங்கோ பானு என்பவன் போல அவளின் முகத்தை பார்க்கிறான்.
பானுவுக்கோ என்ன கதைப்பதென்று தெரியவில்லை, நடுங்கிக் கொண்டு ரதீஸ் பிளீஸ் கொப்பியை தாறீங்களா படித்து விட்டு தருகிறேன் என்கிறாள்.
ரதீஸ் சிரித்து கொண்டு பின்னேரம் வீட்டிற்கு வாருங்கள் தருகிறேன் என்றான்.
அன்று இருவருக்கும் பாடசாலையில் படிப்பே ஏறவில்லை. புத்தகத்தை திறந்ததும் ரதீசுக்கு பானுவும் பானுவுக்கு ரதீசும் தெரிந்தார்கள். புத்தகத்தின் எழுத்துக்களை காணமுடியவில்லை. இப்படியே கொப்பி புத்தகங்களை மாற்றிப் படிப்பதிலேயே இவர்கள் அன்பை வளர்த்துக்கொள்ளும் வேளையில் ஒரு நாள்---

என்ன பிள்ளை பானு இரண்டு நாளாய் ஏன் படிக்க போகவில்லை? என்றவாறே சமையலறையிலிருந்து வருகிறாள் பானுவின் தாய்.

www.padippakam.com

அம்மா நான் இனி ரியூசனுக்கு போகமாட்டன், றோட்டிலை பொடியள் எல்லாரும் சேட்டை விடுறாங்கள் என்றாள் பானு.

இப்பத்தை பொடியள் எல்லாம் உப்பிடித்தான் புள்ள உதையெல்லாம் சமாளிச்சுத்தான் படிக்கவேணும் உனக்கு அண்ணன்மாரும் இல்லையெண்டுதான் தனகுறாங்கள் போலகிடக்கு. அம்மா சொன்னது பானுவுக்கு வாய்ப்பாகபோகவே

அம்மா நதீஸ் அண்ணையும் ரியூசனுக்கு போறவர்தானே அவருடன் போனால் பொடியள் கதைக்கமாட்டாங்கள் என்றாள்.

மறுநாள் நதீஸ் ரியூசனுக்கு போய்க்கொண்டிருக்கிறான். பானுவின் வீட்டடியில் பானுவின் தாயும் பானுவும் நதீசை எதிர்பார்த்தபடி நிற்கிறார்கள் இவர்களைக்கண்ட நதீசுக்கு ஏதோ பய உணர்வு நெஞ்சுக்குள் எழுகிறது.

நதீசு கொஞ்சம் நில்லு தம்பி எனிமேல் ரியூசனுக்கு போகேக்க இவள் புள்ள பானுவையும் கூட்டிக்கொண்டு போ

என்று பானுவின் அம்மா சொல்ல பானு தனது நீலநிற கிரோ சைக்கிளில் ஏறினாள் நதீசுக்கு தாங்க முடியாத சந்தோசம்

இப்போது எங்கு சென்றாலும் நதீசும் பானுவும் கூடவே செல்வார்கள் பானுவை காணாவிட்டால் நதீசுக்கு நித்திரை வராது; நதீசைக்காணாவிட்டால் பானுவிற்கு சாப்பாடு உட்செல்லாது.

தையும் மாசியும் வையகத்துறங்கு என்பதை நிரூபடுத்தும் வகையில் பனிமூட்டங்களுடன் இயற்கை விளையாடிக்கொண்டிருந்தது இதமான குளிர் கொண்ட அதிகாலை வேளையில் நதீசையும் அழைத்துக்கொண்டு ரியூசனுக்கு செல்வதற்காக பானுவின் சைக்கிள் நதீசின் வீட்டை நோக்கி செல்கிறது.

கலோ பானு கொஞ்சம் நில்லும்

எனும் குரலொன்று பானுவை வழி மறிக்கிறது; பிறேக்கை அழுத்தியபடியே குரல் வந்த திசையை நோக்குகிறாள் பானு; கையில் சிகரட் கழுத்தில் சைனட் இடுப்பில் கிரனைட் என்னும் அலங்கரிப்புக்களோடு ரஞ்சித் தென்படுகிறான்.

பானு உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும் என்று சொல்லிக்கொண்டே பானுவின் அருகில் சென்ற ரஞ்சித்

பானு நான் உங்களை விரும்புகிறேன் நீங்கள் என்னை விரும்பாவிட்டால் இந்த சைனட்டை கடித்து விடுவேன் என்றான்.

குளிரில் லேசாக நடுங்கிக் கொண்டிருந்த பானுவிற்கு ரஞ்சித்தின் வார்த்தைகள் உள்ளத்தையும் நடுங்கச்செய்தது

ப்ளீஸ் உதைப்பற்றி என்னோட கதைக்காதேங்கோ நான் நதீஸ

படிப்பகம்

www.padippakam.com


் போக வேண்டும் என்றவாறு பிரண்டபடி சைகயின் படலை
வேகத்துடன் திறந்தாள் பாலு.

ாலுவின் சாதகமற்ற பதிலைக்கேட்ட ரஞ்சித ஏர்த்தமற்ற ஆவே
சடைகிறான் பாலுவை எப்படியாவது தன்வசப்படுத்த வேண்டுமெ
ன்ற நோக்கில் செயற்பட ஆரம்பிக்கிறான்.

ீகூடாளான பாலுவின் உண்மைக்காதலை சிதைத்து பாலுவுடன் கா
த்காதல்கொள்ள முயல்கிறான் ரஞ்சித்.

்படியாவது தனது ஊர்மக்களை ஆயுதம் கொண்டு அடிப்படைச்
வேண்டும் என்மெ கீழ்த்தர நோக்கில் தனக்கேற்ற இயக்க
மான்றில் சேர்ந்து அவ்வூரின் பிராந்தியப்பொறுப்பாளரானவன்
ான் இந்த ரஞ்சித்.

ன்றிரவு எட்டுமணி இருக்கும் கதிரவன் மறைவுக்குப் பின் தன்னா
ான வெளிச்சத்தை வழங்கியபடி சந்திரன் மேல்நோக்கி வருகி
ான். பாலுவின் தாயார் கோவிலுக்குச்சென்றிருந்தார்பாலு மட்டு
வீட்டில் படித்துக்கொண்டிருந்தாள்

ிரென்று செல் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் காணைப்பி
்சாரம் துண்டிக்கப்பட்டு மின்விளக்குகள் அணைகின்றன செய்வதறி
ாது திகைத்த பாலு ஜன்னலூடாக வீதியைப்பார்க்கிறாள்.

பாடிமனுக்கும் ஆமிக்கும் சண்டை நடக்குது. இன்டைக்கு ஊர் அழி
ச்சு என்று கதறிய வண்ணம் ரோட்டை முடிச்சக்களுடன் ஊரமக்கள்
டிக்கொண்டிருந்தனர்.

ட்வுளோ அம்மாவுக்கு என்ன நடந்ததோ தெரிக்கு எனஅச்சோ
ற்று வாயக்குள் முனகு முனகியபடி சுவரில் சாய்ந்த பாலுவிற்கு
வு தட்டுமோசை கேட்கிறது.

ம்மா வந்திட்டார் போல் கிடக்கு என எண்ணியபடி மகிழ்ச்சியுடன்
றைத்திறந்த பாலு அதிர்ச்சி படைந்தாள் சிவந்த கண்களுடன்
ஞ்சித் உள்ளே நுழைகிறான்.

வின் விகாரமான தோற்றத்தைக்கண்ட பாலு பயத்துடன்
வீட்டில் அம்மா இல்லை தயவு செய்து வெளியில்
்ாங்கோ என அழ ஆரம்பிக்கிறாள்.

ங்கை ஆமி ஊருக்குள் நுழைந்து விட்டது அவங்கள் பெண்களுக்கு
்ன செய்கிறாங்களோ அதைத்தான் நான் இப்போது உனக்கு
சய்யப்போறன் நீ தாராளமாய் கத்து உன் கூச்சல் செல் சத்

தங்களை மீறி கட்டளையிடும் போலகை கருணம் என்று பரிகாசச் சிரிப்புடன் பாலுவை நெருங்கினான் நதீஸ்.

பாலு என்று கத்தியவாறு நதீம் உள்ளே நுழைகிறான். ந... திக்கண்ட நதீஸ் உணர்ச்சிவசப்பட்டு தனது இடுப்பில் இருந்த பிஸ்டலால் நதீசை பதம் பார்க்கிறான். நதீசின் ... லை அப்பாக்கி ரவைகள் துளைக்கிறது. செங்குருதி சீறிப்பாய்கி...

ற நதீஸ் என்றவாறு பாலு நதீசைக் கட்டியணைக்கிறா... இருவரும் இரத்த வெள்ளத்தில் நனைய ...க்கொண்டு வந்த ... இராணுவத்தின் செல் ஒன்று பாலுவின் வீட்டின் மேல் விழுந்த... நுக்கிறது. நதீசும் பாலுவும் மட்டுமல்ல அருகிலும் சிதைகிறான்...

மறுநாள் வீரகேசரியில் வன்னியில் இராணுவத்திற் போராளிகளுக்கும் இடம்பெற்ற மோதலில் பல இராணுவத்தி... கொல்லப்பட்டதாகவும், போராளிகள் தரப்பில் கட்டன் ... வீரமரணத்தை தழுவியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன என... எழுதப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல தமிழ் பிரதேசமெங்கும் கா... ன் நதீஸ்க்கு விளக்கம் ஏற்றி சுவரொட்டிகள் பல ஒட்... ம் காணப்பட்டன.

நதீசைப்பற்றி தெரிந்தவர்களையும் புதிதாக அறிந்தவர்களையும் ... பார்த்த ... மக்களின் விடிவுக்காக துப்பாக்கி ஏந்தியவர்கள் இன்று போராட்டத்தின் பெயரால் ... நாசப்படுத்... கிறார்கள். தமது சொந்த நலன்களுக்காக போராட்டத்தை கொச்சைப்படுத்துவதும் இவர்களின் பாவத்தை ... ... கொள்கிறான்.

இவர்களிடமிருந்து இவன் தப்பிப் பிழைப்பானா?

பாவத்திற்கு எதிராக போராட இவன் இணைந்துகொள்வானா?

பாவத்திற்கு இவனே இரையாவானா?

www.padippakam.com



# உங்கள் பக்கம் உங்கள் பக்கம்

"எம்மினம் வளம் பெற
நல்லது செய்வோம்.

K.K.Murugathaasan.
Bromberger Str.3,
4200 Oberhausen 11,
West Germany.
Date: 20 . 07 . 90

ஆசிரியர்
வெகுஜனம்
எசன்

அன்புடையீர்

கடந்த மே—யூன் 1990 இதழில் 6ம் பக்கத்தில் பிரான்சிலிருந்து வெளியாகும் "பள்ளம்" சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவரான கலைச்செல்வன் புலிகளால் தாக்கப்பட்டார் என்று செய்தி வெளியிட்டிருந்தீர்கள்.

நான் அறிந்த வரையில் "பள்ளம்" சஞ்சிகை ஆசிரியர் தாக்கப்பட்டதற்கு இலக்கியம் காரணமல்ல, இயக்கமும் காரணமல்ல. அது அவருடைய தனிப்பட்ட பிரச்சனையுமாகும். ஒருவர் ஒரு இயக்கத்தைச் சார்ந்திருந்து அவர் இன்னொருவருடன் ஏதாவது ஒரு பிரச்சனையில் அல்லது அந்தப் பிரச்சனையின் காரணமாக விவாதத்திலோ அன்றி கைகலப்பிலோ ஈடுபட்டால் அது எப்படி இயக்கம் சார்ந்த பிரச்சனையாகும்? கலைச்செல்வன் தனது சொந்தப் பிரச்சனைக்கு இயக்கத்தைப் போர்வையாய்ப் போர்த்திக்கொண்டு இயக்கத்தைக் குற்றஞ்சாட்டி அந்தச் செய்தியை பரப்பியிருக்கிறார். தனது சொந்தப் பிரச்சனைக்கு இயக்க முத்திரை குத்தி ஜதார்த்தமான எதிர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது ஒரு இலக்கியவாதிக்கு அழகல்ல. இச் செய்தியை தீர விசாரிக்காமல் அவசரப்பட்டு வெகுஜனம் வெளியிட்ட காரணத்தால் இலக்கியவாதிகளுக்கு புலிகளால் இந்த நிலையா? எனப் பலர் வேதனைப்படக்கூடும், ஆத்திரப்படக்கூடும்.

எனவே புலிகள் இயக்கத்தை விரும்பாதவர்கள்கூட இச்செய்தி பிழையானது என்பதை அறியும்வகையில் இக்கடிதத்தை உங்கள் சஞ்சிகையில் பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

அன்புடன்
ஒப்பம் கே. கே. முருகதாசன்.

www.padippakam.com



அன்பான வாசகரே!

"பள்ளம்" ஆசிரியர் புலிகளால் தாக்கப்பட்டார் என்பது ஊர்ஜிதமாக்கப்பட்ட செய்தி இதனை உங்களின் கடிதத்தின் மூன்றாவது பந்தி ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்கின்றது அல்லாமலும் இக் கடிதத்தைத் தவிர இச்செய்தி பிழையானது என்பதற்கான வேறு எந்த ஆதாரங்களையும் எமக்கு கிடைக்கவில்லை இதன் மூலம் நிகழ்வு உண்மை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகின்றது.

கலைச்செல்வனின் தொடர்ந்தப் பிரச்சனைக்கு "வெகுஜனம்" வக்காலத்து வாங்கவில்லை, ஆனால் தனிநபர் மீதான பிரச்சனையால் பலர் இணைந்து வெளிக்கொண்டு வந்த "பள்ளம்" சஞ்சிகை வெளிவர முடியாது போனமைக்கு என்ன காரணம்? தனிமனித சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலும் அபாயங்களும் விளைவிப்பது சுதந்திர மறுப்பிற்கு ஒப்பானது இதற்காக சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பாவித்து அராஜகம் பிரயோகிக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இச் செய்யப்பட்ட செயல் கண்டிக்கற்குரியது இதற்கு எதிராக அச்சம், மடமை, சந்தர்ப்பவாதங்கள் காரணமாக சில சஞ்சிகைகள் மௌனம் சாதித்தார்கள் எனபதற்காக "வெகுஜனமும்" அப்படிச் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பது ஆரோக்கியமான விடயமாக இருக்கமுடியாது உண்மைகளை வெளிக்கொணருவது பத்திரிகைகளின் எழுத்தாளனின் வரலாற்றுக் கடமை அந்த வகையில் "வெகுஜனம்" தனது பங்களிப்பைச் சரிவரச் செய்திருக்கின்றது என்பதை வாசகரே உங்களது கடிதம் ஏனைய வாசகர்களுக்கும் தெளிவிக்கின்றது.

ஆ-கு.

ஆசிரியர் குழு
வெகுஜனம்


தங்கள் பத்திரிகையையும் ஜேர்மனியில் வெளிவரும் பெரும்பாலான பத்திரிகைகளையும் தவறாது படித்து வருகிறேன். ஈழத்து உண்மை நிலைகளை அச்சமின்றி எழுதும் சில பத்திரிகைகளுள் வெகுஜனமும் ஒன்று என்பதை தங்கள் வெளியீடுகளில் வரும் கட்டுரைகள் எமதெண்ணங்கள் பகுதி ஆகியவற்றினூடாக அறிந்து கொள்கிறேன். வெகுஜனம் மேலும் செழுமையுடன் வளர எனது வாழ்த்துக்கள். அண்மையில் தமிழ்பேசும் மக்கள் வெட்கித்தலை குனியுமளவிற்கு தமிழ்நாட்டில் நடைபெற்ற சென்னைப் படுகொலைகள் பற்றி பெரும்பாலான பத்திரிகைகள் இங்குஎழுதாமல் மறைத்துள்ளன. இதன் மூலம்தாங்கள் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுவதில் பழைய அரசியல் வாதிகளுக்கு சளைத்தவர்களில்லை என்பதை நிரூபித்து விட்டனர். இன்றைய சகாப்தத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின் அரசியல் தலைவர்களில் பத்மநாபாவும் ஒருவர் என்னும் உண்மையை மக்களுக்கு சுட்டிக்காட்ட பின்வாங்கும் இவர்கள் முற்போக்கு ஐக்கியம் என்றெல்லாம் எழுதுவதை வாசிக்கும்போது வேதனையும் வேடிக்கையாகவுமுள்ளது. தாங்களாவது பத்மநாபாவின் அரசியல் நடவடிக்கைகளை மக்களுக்கு அவர் என்ன செய்தாரென்பதை மக்களுக்கு அறியத்தாருங்கள் எனக்கேட்டுக்கொள்கிறேன்.

M. SIVALOGAN
SELM-BORK.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# ஐக்கியப்படுவோம்
# போராடுவோம்
# அமைதி காண்போம்



படிப்பகம்